ஸ்ரீரஸ்து.

...த தேசிய கீர்த்தனைகள்.

(தேசபக்த பகவந்நாம ஸங்கீர்த்தனங்கள்)

இஃது
மஹாத்மா காந்தி சரித்திரக் கும்மியின்
ஆசிரியையான எஸ். ரங்கம்மாள்
இயற்றியது.

1-SEP 1924

1924

All rights Re...] [விலை அணா 6

இ... ரசைபாக்கம் டாணாத்தெரு,
...டில் கிடைக்கும்.

O-,1MRM,B
N24
183692

இப்புத்தகம் விற்றுவரும் இலாபத்தில் கால்பாகம் திலகர் சுயராஜ்ய நிதிக்குக் கொடுக்கப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183692

முகவுரை.

ஸ்ரீமதி ரங்கம்மாளால் இயற்றப்பட்ட பாரத தேசீயக் கீர்த்தனைகள் என்னும் இச்சிறியபுஸ்தகத்தில் மனதிற்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கக்கூடிய பக்தி மார்க்கக் கீதங்களும் தேசீய விஷயத்தில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தரக்கூடிய செந்தமிழ்ச் சிறுநடைகளிலடங்கிய அழகிய இனிமையான கீர்த்தனங்களும் மிகவும் நேர்த்தியாகவும் கோர்வையாகவும் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

நமது நாட்டில் பக்தி மார்க்க விஷயங்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய பாடல்கள் ஏராளமாய் புஸ்தகங்களில் அச்சிடப்பட்டு இருக்கின்றனவேயல்லாமல் தேசீய விஷயமான பாடல்கள் வெகு கொஞ்சம் தான் உள்ளது. நமது மாதர்களுக்குத் தேசீய ஞானம் மேல்மேலும் உண்டாவதற்கு இம்மாதிரிப் பாடல்கள் அவசியம் உபயோகப்படுமானதால் நமது சகோதரிமாதர்களெல்லோரும் இப்புத்தகத்தைத் தவறாமல் வாங்கி வாசித்துப்பார்த்துத் தாம் மகிழ்ச்சியடைவதுடன் கேட்பவர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் கட்டாயம் உண்டாகுமென்பதில் ஐயமில்லை.

தவிர, இப் புத்தகங்கள் விற்பனையாய்க் கிடைக்கும் கிரயத்தில் கால் பாகத்தை திலகர் சுயராஜ்யநிதிக்கு அளிப்பதாக ஸ்ரீமதி ரங்கம்மாள் வாக்களித்திருப்பதால் சிநேகிதர்களில் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்குவதால் நாமும் திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒத்தாசை செய்தவர்களாகிறோம்.

இங்ஙனம்:

எஸ், ரேங்கநாயகி அம்மாள்.

(மிஸஸ். எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்.)

PRINTED AT THE KALANILAYAM PRESS, G.T., MADRAS

1-SEP 1

பாகம் 1.

கலைமகள் வணக்கம்.

பிலஹரி ராகம்—சாபு தாளம்.

கண்ணிகள்.

சதுர்முகன் தேவியே சரணமுனைப் பணிந்தேன் என் தாயே
எதிரொருவருமில்லா இன்பக் கலாவதியே வரந்தந்தாயே
கரந்தனில் வீணையுடன் கல்விக்கருந் தெய்வமே வருதியே
வரந்தந்தருளாய் ஸ்ரீ வைகுண்ட நாதனின் மருகியே.
கேசவனைப் பாடக் கிருபை பொழிந்திடுங் கலைவாணியே
தேசமாதாவைப்பாட நேசம்வைத்திடும் பிரமன் இராணியே.
நந்தேயத்திற்கு நலனியற்றிச் சிறை சென்றோரையான்பாட
சந்தமிருந்த பாவாய் செந்தமிழிலருளாய் தேன் ஓட.
தமிழ்மொழியெனும்போதே அமுதூறுது எந்தன் நாவினிலே
கமழ்மணங் காரிப்பிரான் கவிக்கம்பன் எனும்போதே களிப்
[பாயே.

பாரததேவியின் துதி.

பைரவி ராகாலாபனம்.

சுகந்தரும் சுற்றம் நீங்கித் தீவினை யடைந்திட்டாலும்
இகந்தனி லின்னல்பல எய்தியா னிடருற்றாலும்
சகந்தனக் கருநிதியாஞ் சுதந்திரமாதே யுனையே
உகந்து நின்னாமம் செப்பி யுனையடைந் துயிர் வாழ்வோமே.

மோகன ராகாலாபனம்.

துணிவுறு மிந்திய மாதே மனுமுதலோ ராண்ட நாளில்
நனிதவ மகிழ்ந்தா ரிந்த நாட்டினி னுள்ள மாந்தர்

புனிதனுங் காந்தி யிந்தச் சிறைக்கான காலந்தன்னில்
மனத்துய ருற்று நாமும் மகிழ்வற்றோம் மாதர்மணியே.

தோடி ராகாலாபனம்.

தனியரசி நீயே யாகத் தாஸர்களான யிந்தியர்
முனைந்தேவல் செய்யப் புகுந்தார் பொருமையையே
நினைந்துமே நின்றார் சென்ற வாண்டினில் நின்றன்றேய
மனிதர்கள் பட்டபாடு மானிலத்திற் கண்டிலமே

லக்ஷ்மணப்பிள்ளை கீர்த்தனம்.

எங்குற்றாயுனை மெட்டு.

ஆனந்த பைரவி ராகம்—ரூபகதாளம்.

பல்லவி.

அம்பா பாரததேவி யுன் சரணம்
நம்பினே னுந்தன் பாத மாமலரை (அ)

அனுபல்லவி.

அம்புவி மாந்தரை யாதரித்திடாய் நீயே
செம்பொன் மிகவளிக்கும் செல்வச் சீலமணியே (அ)

சரணம்.

அன்புருக்கத்தில் நீயே யுருவானாய்
துன்பத் துயிலகற்றுந் தூயவொளி யாவாய்
என்புருகித்துதி யிசைத்திடும் எனைக் காவாய்
இன்பமளித்தி டெழில் ஏகபராபரையே (அ)

மனஸ விஷய நடமெட்டு.

நாட்டைக்குறிஞ்சி—தாளம் ஆதி.

பல்லவி.

பாரதமாதா வேஸதா பணிந்தோ மிது தருணம்
நேராகியே யனுதினமு முன் கிருபையை நல்குவாய் (பா)

அநுபல்லவி.

சாரதே தேசமக்களின் சஞ்சல முற்றும் நீங்கிட
பாராதேனோ நின் விழியால் பராதீனமும் நீங்கிட (பா)

சரணம்.

மாதர் மாமணியே யுந்தன் மைந்தர்களி லனேகர்
தீதுறுஞ் சிறைப்பாடென்று தீருமோ பாரமாய
வேதனைப் படுகின்றோமெம் சோதனைக் காலமிதுவோ
நீதியருள வரங்கநாத னருள் பொழிந்திட (பா)

லாஜானி என்ற இந்துஸ்தானிமெட்டு

சுந்தரவதி எனுஞ்சோதரிகாளினி எந்த விதமுய்வாளோ
தாய் எந்த விதமுய்வாளோ சகியேசிறைக்கண் பாராய்.
இந்தியத் தாயீன்ற பெரும்புதல்வர் கூட்டமும்
அந்த காரம்சூழுங் காராக்கிரகம் சென்றனர் (சு)

இன்னும்வரக் காணேனடி மெட்டு
பரசுராகம்—ஆதிதாளம்
பல்லவி

இன்னு மொற்றுமை யில்லேயோ யிந்தியரேயுங்கள்

அனுபல்லவி

அன்பு ருகவில்லேயோ அறிஞரை மறந்தீரோ (இ)

சரணம்

கன் மனங் கரைந்திலேயோ காந்திசிறை சென்றதும்
தன்மதிப் புடையோர்களே பின்னேக்கிச் சென்றிடாதீர்
கண்ணியம் நிறைமித வாதிகளே கனமானோர் களே
இன்னுஞ் சிந்தனையேனோ இந்தியத் தாய்க்குழைக்க (இ)

ஒற்று மையுடன்காந்தி யுபதேசம் போல்நடந்தால்
வெற்றி யடைந்திடலாம் வீண்வாத மாடாதீர்கள்
ஒற்றுமைப்பீர் உத்தமர்களே நற்றவத்தோரே
கற்றறிந் தோர்களே பாரீர்மற்றவர் மிடிகள்தீர (இ)

கனகஸபாபதி தரிசனம் மெட்டு
தன்யாசி ராகம்—ஆதிதாளம்
பல்லவி

வந்தோம் ஆதரவளியுமென் தாயே
தந்தோம் உடற் பொருளாவிதனையே

அனுபல்லவி

உந்தனுக் குழைத்தோர் சிறைசென்றதாலே
நொந்தோ மெங்கள் மனமிந்தி யத்தாயே (வ)

சரணம்

சுதந்திரப் போர்கள் சிதைந்திடலாமா
மதமாத் ஸரியங்கள் வளர்ந்திடலாமா
இதந்தரு மிந்தியருக்கேனோவிவ்வேச்சு-இவ்
விதமுந்தன் மைந்தர்களிருந்திட லாச்சு (வ)

த்யானமே வரமைன மெட்டு
தன்யாசிராகம்—ஆதிதாளம்
பல்லவி

நாமினித் தீரமான தேசாபிமானமே
பெருவோமுயர்ந்த ஸ்தானமே (நா)

அனுபல்லவி

ஏனோ இனியுநம் தேசத்தாயின் நிலைகண்டும்
மோன முற்றுறங்கிட லனீதமா மினிமீண்டும் (நா)

சரணம்.

அறம் விளங்கிட வந்த அஹிம்ஸா தர்மாவதாரன்
திருமொழி யதனை நாம் சிரமதனிற் பதித்து
பரம்பொருளைப் பாவினால் பாடிப் பாதம் பணிந்து
உரம்பெற விந்தியாவை உயர்த்திடவே துணிந்து (நா)

இந்தியத் தாயின் குறை.

என்னென் றுரைப்பேனையா—மெட்டு.

மோகன ராகம்—ரூபக தாளம்.

பல்லவி.

இனியென்ன செய்வேனடி எந்தன் மனிதர்
அனைவரும் ஒன்றாய்க் கூடாரோ (இ)

அனுபல்லவி.

மனிதத்தன மொழிந்து மாயவலையிற் சிக்கி
தனிகர்களா யிருந்தும் தரணிக் குழைத்திடார்கள் (இ)

சரணம்.

பேதைகளானோரடி பெரியார் சிறையிலுறும்
வாதை மறந்தோர்தான் நீதி யறிந்தவரோ
சோதனைக் காலம் மித வாதிகளே இனிமேல்
வாதம் செய்வதில் கதி யேதுமில்லை யறிவீர் (இ)

எமிசேத்து மெட்டு.

பல்லவி.

என்ன செய்வேன் தென்னரங்கா,
இன்ன லெய்திட இனி எந்தனாலாமா (எ)

அனுபல்லவி.

சின்னஞ் சிறார்கள் பல்லாயிரவர்
அன்னமற்றுக் கண்ணீருற்று இன்ன லடைகின்றார் (எ)

சரணம்

எந்தன் சோதரி இங்கிலாந்தும்
தந்திரம் மிகுந்த தங்கை ஜப்பானும்
தந்தம் மனம்போல் நிமிர்ந்து
சொந்த உரிமைபெற்றுச் சிந்தை மகிழ்ந்திருக்க (எ)

ஆலமர மென்றதுவும் மெட்டு

ஸஹானு ராகம்—ஆதிதாளம்

பல்லவி

பக்த பராதீனனும் நீதானேரங்கா
சத்திய மோங்காததும் சரிதானே (ப)

அனுபல்லவி

சித்த மிரங்கியே சிறைசென்ற சீலரைக்கா
நித்தியானந்த ஹரியே நின்மன மிளகாதா (ப)

சரணம்

சிற்றிடையாரெந்தன் செல்வப் புதல்வியர்கள்
சிறைசென்றோரை நினைத்துச் சிந்தைமிகவருந்தி
பற்றிப் பணிகின்றார்கள் பரமனே நின்பாதம்
உத்தமிகட்கிரங்கி நித்தியனே வரந் தாராய் (ப)

தெய்வத் திருவாக்கு

மலடிவயிற்று மகன்போலே மெட்டு

பந்தோபஸ்தி லிருந்திடும் மாதே
விந்தையிது வென்று சிந்தைநையாதே
சுந்தரியே நல உரிமையுனக் களிப்பேன்—நிலையாக

லோகமான்யத் திலகரை யீன்றவள்.
போகம் நிறைந்தோ ரனேகரை யீன்றவள்
சோகமுற்றுச் சிறுநகையற்றம்தேனே—எந்தன் மாதே
என்மேல் பற்றுள்ள புண்ணியனும் காந்தி
இன்னு மனேகவித நன்மைகளைச் செய்து [உய்வாயே
உன்னும் சுயராஜ்ஜியத்தை யுளமகிழ்ந்தடைந்து
அன்புமிகுந்தவர்கள் ஆரியபுத்திரர்கள்
துன்பம் சகித்தவர்கள் தூய்மை வாய்ந்தவர்கள்
இன்புறு வரென்று இக்கணம் வரம்தந்தேன்
[இந்தியமாதே
உன்னி னியமக்களந்ய நாட்டினிலுற்று
இன்னல் பலவெய்திக்கண் விழிகலங்கிட
பெண்மணியே நின்மனம் பொறுத்திடினும் யான்
[பொறுக்கேனே

தாய்சொல்

ஆனல் செவிசாய் சாற்று வேனையனே
தானே அன்புநிறைத்தனை யரனைவரையே
வீணு யின்னுடுவிட்டு விலக்கினர் அதனல்—விசனமே

கதர்ப் பாட்டுக்கள்

மாஜானகி செட்ட பெட்டக மெட்டு

காம்போதி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மஹாத்மா வழிமறக் காதுநின்று
மானிலத்திற்கே மகிழ்ந்துழைப்பீர். நீரே (ம)

அனுபல்லவி

லோகந் தனிலுள்ளோர் க்ஷேமமுறச் செய்து
வேகமாகச் சிறை சென்ற தீரர்போன்ற! (ம)

சரணம்

கதராடைநெய்யக் காசினியோர்கள் தானே
பதரிடாது நூல் பரிவுடனே நூற்று
அதிதுரிதமாய் அவனி எங்கிலுமே
ஆதரித்திடவும் மாதரார் துணிந்து
விதேசிய ஆடை விலக்கிடுவீர் நீரே
பதவி யினிலுயர் பாரத மாந்தர்களே
நிதர்சனமாய் நிரூபித்திடு வீர்
சுதந்திர மாயிவ்வுடை தரிப்பீரே (ம)

இகனேமந்துனேசெலியா மெட்டு

ராகம் எதுகுல காம்போதி—ஆதிதாளம்

பல்லவி

சுத்தக் கதரணிவீர் உத்தமரே இந்திய உத்தாரணம
[டைய (சு)

அனுபல்லவி

சுத்த முயர்ந்த பலதத்வம் நிறைந்தநல (சு)

சரணம்

திட்டமாய் நாமுமயல் நாட்டு வுடைவிலக்கி
கட்டிடுவோம் கதரை காந்தி யுரைதப்பாமல் (சு)
உரிமையடைந்தி ந்தியாஸ்திரம் பெறவேண்டுமென்றால்
வறுமைப் பிணியகற்றக் கதராடையே சிறந்த (சு)

எஜிலாவும் டொரியா என்ற இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

என்னுசை சகோதரிகாள் தேச சேவை செய்ய
வாருங்கள் இனித்தா ஆனே (எ)

அனுபல்லவி.

பொன்னுசை தனைவிட்டு வாரீரேப் பிரியமுற்று
நன்ருக இராட்டினங் கைக் கொள்வீரே (எ)

சரணம்.

மாதர்களே மஹாத்மா காந்தியை-இப்
போதே சிறை செய்த செய்தியை
நீதியோ கேளாயிக் கிலேசமதையே
போதனை செய்திட்டார் கதர் நெய்யவே
கீதம் பாடியே இனிச் சர்க்காவின்
ஆதரவாய் ஆடை நெய்வோம் (எ)

பட்டி விடவராது மெட்டு.

கரஹரப்பிரியாராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

கட்டி மகிழுடைவீர் கதராடை (க)

அனுபல்லவி.

பட்டினியால் நொந்து பல்லாயிரம் மாந்தர்கள்
கெட்டுக் கேடுற்றயல் நாட்டி லலேந்திடாமல் (க)

சரணம்.

நித்யா நித்ய வறுமை யுற்றவர்களும்
பற்றியே இராட்டினம் பலவித நூல் நூற்று
சுத்தக் கதரணிவீர் நீரே சுதந்திரமு மடைந்து
வெற்றி பெற்றுய்ய விருப்பமுறும் வீரரே. (க)

தர்த்தேரி கர்க்கி மெட்டு.

பல்லவி

பரதேச ஆடை பாரதர்கள் தரியார். (ப)

அனுபல்லவி

கதராடையை யணிவீர் காசினியோர்களே (ப)

சரணம்

சுதேசிய விருதந்தனை மதியாய்க் கொள்ளுவீரே
உதாசீனஞ் செய்திடாமல் உதவி செய்வீரே (ப)

காந்திக் கீர்த்தனங்கள்.

உன்னைத் தூதனுப்பினேன் மெட்டு.

சாவேரி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மானிடர்களுள் சிரேஷ்டர் மஹாத்மா காந்தியன்றி
கர்ணே னிவ்வறிஞர் போல் காசினியில் (மா)

அனுபல்லவி

வானில் வாழ் தேவர்களுமிவ் வைசியர்தனைக் கண்டு
தன்னே ரொருவரில்லா ஞானி யிவரே என்பார் (மா)

சரணம்

உலகினி லுயர்ந்தவர் ஓதி யுணர்ந்தவர்
பலமதத்தினிடத்தும் பாரபட்சமற்றவர்
விலையிலா மாணிக்க மாயுரைத்தா ரஹிம்சையை
நிலைபெறச் செய்திட்ட ந்யாயவாதியு மாவர் (மா)

புவனீதாஸுடனி மெட்டு.

ஸ்ரீரஞ்சனி—ஆதி தாளம்

பல்லவி

சமரச சன்மார்க்க சாத்வீக மணியை
தர்ம சமாதான தேசமா மணியை (ச)

அனுபல்லவி

அமரரும் புகழ் அஹிம்ஸாதர் மனே
சமரஸமாய்ச் செய்த சாந்த மனத்தோனே (ச)

சரணம்

புத்துலக மாந்தர் புகழ்ந்து மகிழ்ந்து
ஸாது ஸர்வதேச் சிரேஷ்ட் ரிவரென்று
துதிசெய்திடும் தூயனும் காந்தியை
விதிவிட்டு காவ ரங்கா நிதிபோன்றவரை (ச)

ஏமி மாயமு மெட்டு.

காம்போதி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

எந்த நாட்டிற்கு முயர்ந்தவரான
யுதிஷ்டிரரைப் போன்றார் காந்தியும் (எ)

அனுபல்லவி

சொந்த தேசத்திற் குழைத்து-
நுழைந்தார் சிறை இந்தியரே யறிவீர் (எ)

சரணம்

உத்தம தந்தையினோ டுத்தரவின்படியே
ஒற்றுமையாமையி னுடன்சிறை சென்றார் மைந்தர்

சித்தரஞ்சன தாஸனும் சீலன் லஜபதியும்
சுத்தவீர நேருவும் சிறைதனில் தவம் செய்தோர் (எ)

சாதர நடராஜப்ரபோ மெட்டு

பிலஹரி ராகம்—ரூபக தாளம்.

பல்லவி

பாரதமஹா நாட்டின் பிரிய
பாவலரும் போற்றும் பிரபோ (பா)

அனுபல்லவி

விராதி வீரர்கள் வியந்து முழங்கிட
சீராக யிந்தியாவைச் செய்த தீர (பா)

சரணம்

தன்னலங் கருதாது தாரணிக்கே
பொன்முதல் புத்திரரையுமே யீந்தாய்
இன்னல்கள் பொறுக்க ஏசுநாதர் போன்று
எந்நில மெங்கு மொளி வீசுமெம் காந்தி (பா)

ஸ்ரீரகுவரசு குணலயா மெட்டு.

பைரவி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மோகனதாஸ் கரம் காந்தியே மஹான்
லோக ரக்ஷணார்த்தமே விரதமுற்ற நியமன் (மோ)

அனுபல்லவி

லோகோத் தாரணம் செய்ய தேகந் தரித்தவர்
மோகலோபங்களு மற்ற சாந்த சரித்திரர் (மோ

சரணம்

அஹிம்ஸாதர்ம லோலர் அவனிபோற்றும்பிரபலர்
பகைவரும் உகக்கும் சீலர் நகைமுக நரபாலர் (மோ)

ஸுஜன ஜீவன மெட்டு

கமாஸ் ராகம்—ரூபகதாளம்

பல்லவி

ஸர்ஜ்ஜன பூஷிதர் காந்தி சகல ஜனப்பிரியர், (சர்)

அனுபல்லவி

துர்ச்சனரையும் திருத்துந் தூய்மை வாய்ந்தவர்.
அர்ச்சுனர்க் குபதேச கீதையை ஆழ்ந்தறிந்தவர் (சர்)

சரணம்

உலகெங்கிலும் கீர்த்தி பெற்ற உத்தமர் இவர்மனம்
நிலந்தனில் சமாதானத்தி விருத்தியே தன்தொண்டரை
கலைவல்லோனுகி காந்தி காசினியோர்க்கே
தலைவராகி தர்மம் நிலை நிறுத்திட வந்தார் (சய)

க்ஷீரசாகர சயன மெட்டு

தேவகாந்தாரி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

பாரத தேச அருந்தவத்தலைவர்
சீராமஹிம் ஸாதர்மம் நிலவ (பா)

அனுபல்லவி

தீரு மிடுக்கனென பாரதர் கூவிட
நேராம் ஸத்யாக்கிரகம் செய்திடக் கூறின (பா)

சரணம்

காரிகையிற் சிறந்த கஸ்தூரியை மணந்த
ஆரியநாட்டின் அரும் பெரும் புத்திரர்
நேரிழை யாமிந்திய மாதின் மனதினில்
கோரி யதையளிக்கும் கேசவபக்தர்—ஆ
சாரிய ஸ்தானமதை யகிலமெங்கு மளிக்கும்
சீரியகுணம் வாய்ந்த வீரிய விசித்திரர்
சூரிய காந்தியாய்ப் பாரெங்கிலும் வீசும்
கூரிய மதிவாய்ந்த பேரறிஞன் காந்தியே (பா)

தப்பி பிரதிகி போவதரமா மெட்டு
தோடி ராகம்—ரூபகதாளம்
பல்லவி

இப்புவிக் கினித்துயரம் நீங்கிட மஹாத்மா காந்தியே (இ)

அனுபல்லவி

ஒப்பிலா உண்மை பொருந்திய வீரர்
தப்பித மென்று மியற்றிடா தீரர் (இ)

சரணம்

அலைகடல்சூழ் அவனி யெங்கிலும்
தலைவரென் றேற்றும் தீரசிங்கம்
பல மதத்தினர்க்கும் தங்கம்
உலக சிரேஷ்டர் ஓதும் பிரசங்கம் (இ)

வேதாந்தா சார்யாய மெட்டு
சங்கரா பரண ராகம்—சாபுதாளம்
பல்லவி

தேசாபிமானப் பெருஞ் சிங்கம்
காசினியோர் புகழும் தங்கம் (தே)

அனுபல்லவி

யோசனை சக்திவாய்ந்த யோகீசன்
தேசத்திருமகள் விலாசன் (தே)

சரணம்

மண்ணினில் மாந்தரவர் மகிமைதனை மறந்து
இன்னமு முறங்கியே யிருந்திடல் நியாயமா
அன்னை யிந்தியமாதா ஆவிமிக நைந்துருகி
இன்னலடைவதை யினிக் காணலாகுமா (தே)

எந்தடி குலுகே மெட்டு

கலியாணி ராகம்—ரூபகதாளம்

பல்லவி

இந்தியமாதா இன்னலடை கின்றாளிதோ (இ)

அனுபல்லவி

காந்தி சிறை சென்றமுதல் வீண்காலம் போக்கு மிந்தியரை
ஏந்திழை யண்ணையுங்கண்டு ஏங்கிமனந் தாங்காமலே (இ)

சரணம்

அந்தோ பாரதமாதா சிந்தித்திடும் முகம்பாரீர்
சொந்தமக்கள் இவ்விதமாயின் எந்த விதமுய்வோ மெ
ன்றுமே (இ)

இதுதானோ தில்லைஸ்தலம் மெட்டு

பியாக்கு ராகம்—ஆதிதாளம்

பல்லவி

இந்திய நாட்டின் சீமான் எங்கும் நிகரற்ற கோமான் (இ

அனுபல்லவி

இயந்திர மகற்றும் நியமன் மந்திரமறியும் பூமான் (இ)

சரணம்

பாரத மாதிளம் புத்திரர் பாரினிலெல் லோற்கும் மித்திரர்
தீரதிட சத்யவிருதர் வீர உத்தம சரித்திரர் (இ)

குன்றைக்குடிக்கு மரனே மெட்டு

கமாசராகம்—ஆதிதாளம்.

பல்லவி

சத்தியந் தப்பா னொருவனே மஹாத்மாகாந்தி (ச)

அனுபல்லவி

உத்தமகுணம் படைத்த பத்தினியுட னிருப்போன் (ச)

சரணம்

தொல்லுலகினி லிந்த தூய்மையான பக்தன் போலே
செல்லுங் காலந்தனிலும் சீர்மை சீலம் நிறைந்த (ச)

நினுவினு கெதிலேதீசா மெட்டு

பல்லவி

உனையன்றிக்கதி ஏதையா உத்தமி இந்தியா
தனை மீட்கத்துயர் போக்க (உ)

அனுபல்லவி

கனவானே நம் நாட்டிற் கினிமேலும் நன்மைதேட (உ)

சரணம்

வீரனே உந்தனுட உதவி மறுக்தலில்
சேர இந்திய மக்கள் சிந்தை மகிழ்ந்து வந்தார்
பாரினில் பாரத பாக்கியம் பலமடைய (உ)

சீர்சிறக்குமேனிபசேல் என்ற திருப்புகழ் மெட்டு.

சீர்சிறந்த சீமையிலே ஏறியே
பார்புகழ் பாரிஸ்டராகியே நம்
கார்குழலாள் கஸ்தூரியை மணந்தார் காந்திசீமான்.
இன்னும் நூராண்டிருந்திட வேண்டியே
மன்னும் பலவா லயத்துள் பாடியே
சென்று இந்தியரெல்லோரும் கூடியே துதிசெய்வோமே

பாதிமதிபோற்றும் என்ற திருப்புகழ் மெட்டு.

பாரதர்களுக்கு நீதியளித்திடும்
ஸாரமறிந்த நற் சந்திர காந்தி
தாரணியிலுள்ள தாழ்ந்த மாந்தருக்கும்
சீரளித்திடும் நற் சூரிய காந்தி

இன்னிலந்தனி லிருக்கும் பக்தரில்
முன்னணியில் நிற்கும் முதியோனே
நன்னய குணமும் உயர்ந்த வாணிபமும்
பொன்மயமாம் பம்பாய் பதியோனே

தாரதிலாரதிலபரஹே மெட்டு.

பாரடி நந்தேச பாக்கியமே
பக்தன் மகாத்மா காந்தி வாக்கியமே.
கூறடி யனைவர்க்கும் குருமொழிபோலிதனை
சீரடி யிச்சமயம் தீரடி அச்சமதை (பா)

ஹிராகே மெட்டு.

இத்தேசம் வாழ்ந்திட வரந்தாராய் ஈசா
சுதேசம் செழித்திட ஜயம் தாராய் தேவா

உத்தேசம் காந்தி மனம் போலதாமே
பக்தர்களைக் காக்கும் பரந்தாமா எமையே

துரிதம்.

இத்தருணம் காவாவிடிலெவர் கதிதருவார்
பக்தர்க்கனுகூலா பார்த்தர்க்குபதேசா (பா)

லோகமான்ய திலக்ர் கீர்த்தனங்கள்.

ஜயஜய கோகுல பால மெட்டு.

பைரவி ராகம்—ரூபகதாளம்.

பல்லவி

ஜயஜய ஸ்ரீ லோகமான்ய ஜயஜய பாலகங்காதர
ஜயஜய திலகப்பிரகாச ராஜரிஷியார்க்கே (ஜ)

சரணம்

தயவாய ஹிருதயமுற்ற தாஷ்டீக மஹா ராஷ்டிரா
நயவாதமாய் நவின்ருய் எங்கும் நாவில்வல்ல நரசிரேஷ்டா (ஜ)
கணிதசாஸ்திர நிபுண கர்மயோக ப்பிரவர்த்தகா
அணிகலனு மாரியபுத்திரா ஆத்மார்த்த சுயசரித்திரா (ஜ)

எப்புடு க்ருபாகல்குனோ மெட்டு.

முகாரி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

பாரதமாதாவிற்கு ஓர் பாலகங்காதர திலகா (பா)

அனுபல்லவி

ஸாரமிருது வசனனே சுயராஜ்ய சுதந்திரனே
பாரமார்த்தீக பிரம பாரத புத்திரனே (பா)

சரணம்

ஞாலமதி லுனைக்கண்கள் காணாதிருந்தேன் பயன்
சாலவும் நின் உபதேசம் கேளாதிருந்தேன் பயன்
பாலகங்காதரா உந்தன் பாதம் பணிந்திலனே
மாலரங்கனூர் கீதை மர்மம் தெளிவித்தோனே (பா)

பாலகங்கருவாலே மெட்டு.

சீலகுணச் சிறுவர்களே நீரும் (சீ)
பாலகங்காதர திலகர் பழக்கியபடி நடந்தாலே
கோலாகாலமாகவேநாம் குடியரசாள்வோமே
மஹா ராஷ்டிர வீரனுரையை மனதினிற்கொள்வோமா
இகபரசுகமுழுதடைந்து இன்பமடைந்திடுவோமே [ஞல்
விபினச்சந்திரபாலர் விளம்பியபடி நடந்தாலே
சுபிட்சமாகவே நாமும் சுயராஜ்ஜியமடைவோமே
சுதேசமித்திரன் இந்துதனையே சிரத்தையுடன்படித்தாலே
விதேச சாமானனைத்தும் விலக்கிநல மடைவோமே.

ஸ்ரீமான் லாலா லஜபதிராய்.

பாராயப்பா மண்டபந்தனை மெட்டு.

பல்லவி

பஞ்சாபு வீரனே லாலாலஜபதியே (ப)

அனுபல்லவி

அஞ்சாத வீரனென ஆங்கிலேயருங்கூறும்
வஞ்சியாமிந்தியத்தாயின் சஞ்சலம் நீக்க முயலும் (ப)
உத்தமனுங் காந்தியுடன் பக்திசெய்து பார்தனக்கே
மெத்த ஊழியம் செய்தோரில் குற்றமற்ற முதல்வனே (ப)

தேசபந்து சித்தரஞ்சன தாஸர்.

மஞ்சிதினமு நேடு மெட்டு.

ஆனந்த பைரவி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

சித்தரஞ்சன தாஸர் ஸ்ரீமதி வஸந்தா நேசர் (சி)

அனுபல்லவி

பக்தி மிகவுமுற்ற சுத்தனும் இந்திய தாஸர் (சி)

சரணம்

தேசவிடுதலைக்கே கிலேசமுற்று வுழைக்கும்
ராஜனைப்போன்ற இலக்குமி விலாஸனும் வங்கநாட்டின்
வாஸனும் வாக்கில் வல்ல போஜனும் பூவுலகில்
நேசர்களால் நிறைந்த தேசபந்துவாம் தாஸர் (சி)

கொடுத்தார் மந்திரித்தொழில் விடுத்தார்வேண்டாமெனவே
எடுத்த வினையனைத்தும் முடிக்கு முறுதியுற்றோன்
அடுத்தோரையாதரிக்கும் அறியத்தியாகியுமாவர்
அடிமைத்தனமொழிக்க ஆண்சிங்கம் போன்றவர் (சி)

பண்டித மோதி லால் நேரு.

இந்த யோசனை ஏதையா மெட்டு.

கலியாணி ராகம்—ரூபக தாளம்

பல்லவி

பண்டித நேருவே பாரத மேருவே
எண்டிசையோர் புகழு மிந்தியவீரனே (ப)

அனுபல்லவி

அண்டின அன்னிய ஆடம்பரந்தனை
விண்டு எறிந்ததில் கண்டதுந்தனைமுதல் (ப)

சரணம்

மேனாட்டணிகலனை வீணாட்டமென்றறிந்து
தானாகித் தியாகம் செய்தாய் தாரணியோர் புகழ
சேனாதி பதியாகிச் செய்த ஒற்றுமையாமை
பேனாவினா லெழுதி யாகுமோ பெரியோனே (ப)

சட்டசபையுட் சென்று ஸர்வகட்சி மானாட்டை
திட்ட மாய்க் கூட்டுதற்கு தீவிரமாயுழைக்கப்
பட்டவர்களில் தளகர்த்தனாகியே நின்று
முட்டுக்கட்டைகள் போட முயற்சிக்கும் வீரனே(ப)

ஸ்ரீமான். ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

சேத்துலார மெட்டு.

கரஹரப்பிரியாராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

சேலம் ஸிராஜகோபாலாச்சாரியார் உலகினிற் கனுகூலர்(சே)

அனுபல்லவி.

சீலமுயர்ந்த நஞ்சோதரர் உயர்பத்திரிகை
பால இந்தியாவிற்கே பேருழியம் புரியும் (சேல)

சரணம்.

மன்னன் காந்தி யுரையைத் தன்தலைமேற்கொண்டு
தென்னாட்டினருக்கே அறிந்திட உரைத்தார்
இன்னல்கள் ஒழிக்கவே வெண்கத ருடுத்திட
இன்னு மெடுத்துரைக்கும் உன்னத காந்தி சீடர்(சேல)

சுதேசமித்திரன் பத்திராதிபர்
ஸ்ரீமான் ஏ. அரங்கஸாமி அய்யங்கார்.

தனவாரிதானமு லேதா மெட்டு.

ராகம் பியாகடை—ஆதிதாளம்

பல்லவி

தென்னிந்தியா வாழ்தமிழ் மக்கள்க்கூக்கம்
என்று மளிக்கும் ஏ ரங்கஸாமி சீமான் (தெ)

அனுபல்லவி

பன்னருங்கலையைத் தாங்கிப்பாரதர்க்கே
அன்னியரும்புகழ் அறிவை விளக்கும் (தெ)

சரணம்

சுதேசமித்திரன் பத்திரிகையதால்
இத்தேச மக்களுக் குணர்ச்சியளிக்கும் (தெ)

மௌலானா அலி சகோதரர்கள்.

தாண்டவ நித்யஹரிமெட்டு

கானடா ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மௌலானா முகமதலி யவர்தனக்கே முன்னவர்
ஷவுக்கத்தலி மகாதீரர்
பீ அம்மணீன்ற வீரப்புதல்வராம் சோதரர்
தாய் இந்தியா நாட்டின் தாஸராம் பாரதர்
தூய காந்தி யுரையை நேயமாய்ப் பின்பற்றும்
தூய்மை நிறைந்த கிலாபத்தினை நன்கு மீட்கும்(மௌ)

ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

மனவினி வினுமா மெட்டு

ஜயநாகவராளி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

ஸரோஜினிதேவியே சீர்சிறந்தகவியே (ஸ)

அனுபல்லவி

பரோபகாரமதாய் பலபணியியற்றிடும்
பாரத மஹாநாட்டின் நேராகிய நன்மகள் (ஸ)

சரணம்

அன்னை பாரதியீன்ற அறியபெருமஹானே
பின் துடர்ந்துநாட்டிற்குப் பேரூழியம்புரிந்து
சொன்னயமுமிகுந்து சிறந்திடும் மாதரசி
இன்னல்களொழித்திடாய் இந்தியமாதரார்க்கே (ஸ)

ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்

ஜோர் ஜோர மெட்டு

பல்லவி

சென்னை மயிலை வாழும் செல்வராம் சீமான் (செ)

அனுபல்லவி

மன்னுயர் குலம் வந்த சீனிவாஸய்யங்கார் பூமான்
தென்மதுரை தோன்றினர் உயர் தெய்வீகக் காந்தி
சீடர் (செ)

சரணம்

நியாயவாதம் தனிற்சிறந்த தென்னாட்டின் தலைவர்
நேயமாய்ச் சர்க்கார்ப்பதவி நீக்கியத்தியாகியுமாவர்
தேயத்தொண்டியற்றுவோர்க்கேதூய வூக்கமளிக்குமவர் (செ)

சஞ்சலம் நீங்க சத்திய மோங்கத் தோன்றிய கதர்
பஞ்சம் ஏகும் பாவம் போகும் பாரதநாட்டின் நற்கதர்
மிஞ்சும் பொருள் புகழென்றோதும் இந்திய நீதி வாத
சோதரர் (செ)

ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு.

மாயதானி மோசமிப்புடு மெட்டு

பல்லவி.

வரதராஜர் பரத தேச ராஜவைத்திய தேச நேசர் (வ)

அனுபல்லவி

விரதமாயரசாங்க வரியை விலக்கி யொற்றுமையாதீரர் (வ)

சரணம்

தாய் திருநாட்டிற்குத் தொண்டு இபற்றுந் தென்னாட்டுத் [திலகர்

தூய கொள்கைக்காக மூன்று முறை சிறை சென்று [வந்தார் (வ)

ஸாத்வீகப்போரதனில் தலை சிறந்தோங்கும் தீர சிங்கர்

மஹாத்மா வழிபின் பற்றும் மேன்மை தங்கியபிர [சங்கர் (வ)

ஹிந்துப் பத்திராதிபர் ஸ்ரீமான் கஸ்தூரி ரேங்கய்யங்கார்.

கமலநயன வாஸுதேவ மெட்டு

செஞ்சுருட்டி ராகம்—ரூபக தாளம்.

பல்லவி

தொண்டுபல செய்தார் தேயந்தனக்கே

தீரர் கஸ்தூரி ரங்கரும் (தொ)

அனுபல்லவி

மண்டலம் புகழ்தங்கமாமிந்து

பத்திரி காசிரிய சிங்கமாம் (தொ)

சரணம்

ஆண்மைதனையே யனைவர்க்கு முரைக்கும்

மேன்மைதங்கிய மெய்யனும்

உண்மை மிகுந்த கண்ணியமும் நம
தன்னைக் கூழியம் செய்கையனும் (தொ)

ரவீந்திரநாத தாகூர்.

தெலியலேதுராம மெட்டு

பல்லவி

மஹாகவி ரவீந்திரநாத தாகூர் (ம)

அனுபல்லவி

அகமகிழ்ந்து அவனியோர் சேர்ந்து
வெகுமதி யீந்தார் ஜககவி என்றும் (ம)

சரணம்

பஞ்சாபின் துயர்க்குப் பரிதாபங்கொண்டு
சஞ்சல மடைந்து ஸர்ப்பட்டம் வெறுத்தார்
வஞ்சி பாரத மாதின் கவி வள்ளல்
கொஞ்சும் வங்க நாட்டின் குணகேசரி (ம)

ஸ்ரீமான் ஸி. ஸுப்பிரமணிய பாரதியார்.

எப்புடு க்ருபாகல்குனோ மெட்டு

முகாரி ராகம்—ஆதிதாளம்

பல்லவி.

கன்னலமுதக்கவி ஸுப்ரமண்ய பாரதி (க)

அனுபல்லவி.

செந்நெல்விளையும் திருநெல்வேலியில் வந்து
பன்னருங்கவியீந்து பாரினுக்கே உவந்து (க)
பொதிய மலைச்சாரலே அதிமதுரப்பாவினால்
துதி செய்திடுந் தூய, நின்ஸதி வள்ளிகார்த்திகேய,
பதியாம் பாரதநாட்டை பலவிதமாகப்பாடி
நிதியாந் தமிழமுதக் கவி புவிதனக்கீந்த (க)

தேசத்தலைவர்களின் திறமையிசைத் தாய்பாவால்
ஈசனேடியற்கையும் இனிமைததும்பும் பாவால்
ஆசைமூன் றகற்றிடும் கேசவன் கீதைதனை
காசினிக்கே பாவாக ஈந்த அருங்கவியாம் (க)

ஜகதீச சந்திரவஸு.

கிரிபைநெல கொன்ன மெட்டு

ஸஹானு ராகம்—ஆதிதாளம்

பல்லவி

ஜகதீசசந்திர வஸுவின் மகிமையைப் பகரவசமாமோ (ஜ)

அனுபல்லவி.

மகரீயர் தெரிந்தார் மரம்செடிகொடிகளும்
சுகாசுகமுணர்வதும் தீர்வதும் தெளிவதும் (ஜ)

சரணம்

புவிதனிலுயர்ந்தவர் பூதத்வ சாஸ்திரக்ஞர்
தவத்தினிற் சிறந்தவர் அவதரிக்கும் நாட்டில்
அவனி புகழ்ந்திடும் அன்னை பாரதிமைந்தன்
புவிமுகதிலகதல வங்கநாடுவாழும் (ஜ)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

மாட்டலாடரா மெட்டு

தேசியத் தோடிராகம்—ரூபகதாளம்

பல்லவி

பஜனை செய்குவோம் பரம ஹம்ஸரையே (ப)

அனுபல்லவி

தசதிக்கிலும் ஞானகீர்த்தி நிறைந்த ராமகிருஷ்ணமூர்த்தி
விஜய சக்தியின் அருள்பூர்த்தி பசுபதி பிரம மயார்த்தி (ப)

தட்சிணேச் வராலயத்தில் தேவதேவியருள் பாலித்தாள்
நிச்சய தத்வத்தோடிருந்த கிருஷ்ண ராமரையே
பட்சி வாகனன் பிரமன் பார்வதி பதி மூவரும்
தட்சிணேச் வரீசக்தியாய் தரிசனமவர்க் களித்தார் (ப)

ஸ்வாமி விவேகானந்தர்.

ராஜனுக் கிணைசொல்லப் போகுமா மெட்டு.

பல்லவி.

ஆனந்தர்க் கிடுரைப் பவருண்டாநரேந்திரகுமாரவிவேக (ஆ)

அனுபல்லவி.

ஆனந்தம் பெற்றார் அவனிமீதுள்ளோர்
ஞானனந்தம் பெற்றார் நரேந்திர குமாரர் (ஆ)

சரணம்.

ஓதி யுணர்ந்தோரில் உயர்தாரணை யடைந்தார் நற்
போதனை யுலகிற்கு அருளினர முதமாய்
வேதாந்த மறிந்தார் நம் தேசநிலை தெரிந்தார்
வேதகீத போதவாத வித்வன் மனேசித்தனை (ஆ)

கலியாணப்பத்தியம்

மணமகள் கூற்று

ஆனந்தபைரவி ராகம்

என்னின்பக்காதலா ஏந்திழையா ளெண்ணம்
அன்பனே நின்னடியில் அறிவிப் பேன் கேள்
கன்னனை யொத்த கொடை காமனை யொத்தவெழில்
உன்னித எண்ணங்கொண்ட உத்தமனே நீ

துரிதம்

சென் னெல்விளையு நந்தேசந் தனக்கே
தன்னயங்க ளற்றுமே தானுழைக்கும்
மன்னனும் மகாத்மா காந்தி சீடராய்
இன்னிலத் திலிருக்கவேண்டும்

2

பாரத தேசத்தில் பலநாளாய்ப் பரவிய
பரதேச நோய்களைத் தீர்க்கவென்றால்
சீராக அருமருந்து உண்டு பத்திய மிருந்தால்
பாரத தம்பதிகள் வாதை நீங்கும்

துரிதம்

பலதேச சாமானை விலக்கவேண்டும்
நூல்நூற்று ஆடைகள் நெய்யவேண்டும்
காலதேச மறிந்து நடக்கவேண்டும்
தலைவர்க்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்

மதுவிலக்கு

சக்கனி ராஜ மெட்டு.

பல்லவி

மிக்கத் தீமைகள் தரும் கட்குடி யொழிப் பீரே
இக்கலி மாந்தருக்கே இடும்பைதருங் குடியே (மி)

அனுபல்லவி

பக்குவம் செய்தபாலில் பலவகை ரசந்தனை
தக்கவாறு கலந்து அருந்துவீர் அயர்வு நீங்க (மி)

சரணம்

மகிழ்ந்து மனைவி மக்களுடன் மனைவாழ் விருக்க
இகழ்ந்திடு மின்பக்குழி இடறி விழுவதுபோல்
திகழும் நற்பாலும் தித்திக்குந் தேனுமிருக்க
இகழு மதுபானம் ஏனோ இத்தரை யோரே (மி)

ஊஞ்சல்

காந்தி யரவிந்தரிரு கால்களாக
சாந்தகுண லஜபதிராய் விட்டமாக
சேர்ந்த அலி படேல் நான்கு சங்கிலியாக
தேர்ந்த பண்டித நேருபலகையாக
இந்து முஸல் மான்களிரு மாலையாக
அந்த முள்ள தாஸர் ஆபரணமாக
வந்தே மாதரமென்று மாதர் பாட
சுதந்திர தேவி மகிழ்ந்தாட ஊஞ்சல்

சுறடி ராகம்—சாபு தாளம்

மங்களம் மேதினிக்கும் மஹாத்மா காந்திக்கும்
மங்களம் மாது கஸ்தூரி மைந்தருக்கும்
மங்களம் முகமதலி ஷவுக்கத்தலி மாதாவிற்கும்
மங்களம் காந்திமகிழ் ராஜ கோபாலாச் சாரிக்கும்
ஜயமங்களம் நித்ய சுபமங்களம்

பாஞ்சால மன்னராய்ப் பார்தனக்குழைத்திட்ட
அஞ்சா ஆண்மைநிறை லஜபதிக்கும் கிச்லுவுக்கும்
கொஞ்சுங் கவிஸரோஜினிக்கும் சித்தரஞ் சன தாஸருக்கும்
நெஞ்சந்தனில் நேர்மைமிகு நேருவுக்கும் பாரதர்க்கும்
ஜயமங்களம் நித்ய சுபமங்களம்

பாகம் II.

ஸ்ரீ பகவந்நாம ஸங்கீர்த்தனங்கள்.

ஹயக்கிரீவர் துதி

ஸங்கல்பமே மெட்டு

கரஹரப் பிரியா ராகம்—ஆதிதாளம்

பல்லவி

ஹயமுகனே அடிபணிந்தேனே
நயமுற்ற கவி நல்கிடுவாயே (ஹ)

அனுபல்லவி

தயவாகியே தாரணிமாந்தர்க்கே
ஜயம்பெறக்கல்வி யீந்திடாய் (ஹ)

சரணம்.

ஸர்வலோகநாத ஷட்குண நிதே
ஸர்வ கலாபோத பிரமக் ஞானவேத
நிர்மல வெள்ளைப் பரிமுகநாத
தர்ம மயகவியமுதம் பொழி (ஹ)

ஸ்ரீ சடகோபன் துதி

ரகுநந்தனனே என்ற மெட்டு

மகிழம்பூ ஹாரனே திகழ் தமிழ் வேதனே
மதுரகவிமனம் மகிழரங்க மாரனே (ம)

அனுபல்லவி

திகம்பரனே நின்திருவாய் மொழிக்குநிகர்
ஜகந்தனிலில்லை என்றே பறைசாற்றினர் பாவலர் (ம)

சரணம்

ஞானமுத்திரைக் கையும் மோனந்தவழ் முகமும்
தியான ஹிருதயமுற்ற ஞானதேசிகன் பாரீர்
கானமதற் கியைந்த கவியோராயிரம் தந்த
தேனுந் தமிழ் மறையின் திருக்குரு கைநம்பி (ம.)

ஸ்ரீ ராமானுஜர்

மருக்கேலரா ஓராகவா மெட்டு
ஜயந்த ஸ்ரீ ராகம்—ஆதிதாளம்
பல்லவி

ராமானுஜாய நமஸ்தே—ஸ்ரீ (ரா)

அனுபல்லவி

தாமரைக்கண்ணன் தரிசனமீந்து
நியமித்தவைணவ மதஸ்தாபகா (ரா)

சரணம்

பாரத நாட்டினிற் பரவவைணவம்
நேராகியுழைத்த தீர யதிராஜா
பாரளந்த ரங்கன் பாதம் பணிந்தேத்த
சீரா யுபதேசம் செய்த பாஷ்யகாரா (ரா)

ஸ்ரீ வேதாந்த தேசிகர்.

கிரிபைநெல கொனராமுனி மெட்டு
ஸஹானு ராகம்—ஆதிதாளம்
பல்லவி

பரிமுகனருள்வாய்ந்த நிகமாந்த தேசிகரடிபோற்றி (ப)

அனுபல்லவி

வரதனுகந்த திருமா மலைமால்மணி
வரகவிதார்க்கிக ஸிம்ம வேதாந்த குருமணி (ப)

தமிழ்நாடு ... பக நிலை

சரணம்

வடபெருங்கோயிலுற்ற அரங்கன் மகிழ்ந்திட
வடமொழியதனிலும் கவியமுதம் பொழிந்தே
சுடராழியானுரை துரிதமாய்க்கைக்கொண்டு
வடகலை வைஷ்ணவ மதம் நிலை நிறுத்திய (ப)

அஹோபிலமடத்து ஆதிகுருவணக்கம்.

சரணுகதியடைந்தேன் மெட்டு.

நாதநாமக்கிரியா ராகம்—ஆதிதாளம்.

பல்லவி

சகோதரி கவனி ஸ்ரீ லக்ஷ்மீ நரசிங்கன் பவனி (ச)
அஹோபில யதீந்திரர் அடிபணிந்தேற்றும்
மகா பல இரணியனை மார்பகம் கீண்டோன்
ஜகாதாரமாகிய திருமகளைப் பூண்டான்
யுகமாம் கலிமாந்தர்க்கே சுகமளிக்கவந்த (ச)
வடகலை வைஷ்ணவ மதநிலைபோதிக்கும்
சடகோப யதீந்திரர் திருப்பணி நிறுத்திய
கடற்பள்ளி கொண்டுகக்கும் கமலாக்ஷிநாதன்
இடர்களைத்தீர்க்கும் எங்களரங்கேசன் (ச)

மலர் மகள் துதி

துளஸீ பில்வமல்லிகாதி மெட்டு

ராகம் கேதாரகௌளம்—ஆதிதாளம்

பல்லவி

அலஸகாமினீ ஹரிப்ரியே அம்புஜா
தளலோசனீ களஹம்ஸினி கனகாங்கினீ (அ)

அனுபல்லவி

பலதாயனீஜகத் பாபவினசினீ
மலர் மானினீ மாமணியே மனோஹரி
விலாஸவிஜயே விமலேஸ்வரீ மணி (அ)

சரணம்

உனையன்றி வேருளரோ உலகினிலின்பம் நல்க
அன்னையன்றி யாருளரோ ஆதரிக்க அவனியில்
ஜனகன்மகிழ் குமரி மணங்கமழ் மாலினி
தனமேயுருவாய் வருவாய் தயாபரிதாமரை யணி (அ)

ஸங்கீத சாஸ்த்திர ஞானமு மெட்டு

முகாரி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

செங்கமலச் செல்வினீயே பொங்கும் பாற்கடல் புத்தமுதே (செ)

அனுபல்லவி

திங்கள் சகோதரி திருவரங்கன் தேவி
எங்கும் நின்கண் மேவி யிடுக்கண்தீர் தாவி (செ)

சரணம்

மறைமுற்றுணர்ந்த மஹராஜன் வேள்வி
தரைமுற்றந் தனில் தவிழ்ந்தாய் நன்ருகி
குறையற்ற செல்வம் கொஞ்சிடும் பூதேவி
அரன் வில்லொடித்த அபிராமன்ஞவி (செ)

தாரினீ தெலுஸ மெட்டு

சுத்த சாவேரி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மார்புறை மானினீ யறிந்தேன்—திருமாலின்
திருமாலின் கார்கமலமதை யடைந்தேன் (மா)

அனுபல்லவி

பாரபுகழ் பார்த்திபனுக பலந்தனமூ மீய
யார் புகலாதரி அணியரங்கன் நாயகி (மா)

சரணம்

பூசித்திடு மாந்தரைப் பூவுலகபதியாக்கி
நேசித்திடும் மாந்தரை நேர்தர்ம நிலையாக்கி
யாசித்திடும் நரர்க்கு இராஜ்ய பதமளித்து—பிர
காசித்திடும் பெருமானிலவரசி நரர்கள் இ
ராசராச னென்றிரு மாந்தீசனையடைந்திட உ
பாசனை புரிவதினு தாசின மியற்றிடும்
யோசனையறிந்துமே கேசவன் நாயகி—அன்
னேசர்களைப் பிரிந்து நெறியோரிடஞ் செல்லும் (மா)

நாதரமா நினுவர்ணிம்ப மெட்டு

கமாஸ் ராகம்—ஆதிதாளம்

பல்லவி

யார்துணையலர்வதனி ஹரிப்பிரியே (ஆ)

அனுபல்லவி

கோரின தொண்டர்க்கே ஆரமுதமளிக்க (ஆ)

சரணம்

பாலப் பருவந்தனில் லீலையாய் வில்லகற்றி
ஞாலமதிசயிக்க விசால நயனிநீயும் .
மால ரங்க ராமனின் மார்பினில் மாலைசூடி
கோலமாங் கலியங்கொண்டு கொலுவமர்ந்தாய் (ஆ)

முந்துவெனகானிரு மெட்டு

தர்ப்பார் ராகம்—ஆதிதாளம்

பல்லவி

வில்லிபுத்தூருறையும் விட்னுசித்த ரமுத—ச்
செல்வியே ஸ்ரீராம சீதா கோதா (வி)

அனுபல்லவி

முல்லைமலர் சூடிக்கொடுத்து முகுந்தனன்பு பெற்ருய்
அல்லலைத் தீர்த்தாதரி அடியார்களை யாண்டாளே (வி

சரணம்

தண்டமிழ் நாயகி தாமரையா தநி
மண்டலத்தீஸ்வரி மால்திரு மார்பணி
தண்டிகை மீதமர்ந்து தரிசனமீந்திடும்
அண்டர் தலைவனணி யரங்கன் கோதை நாயகி (வி)

ஸ்ரீராமன்.

பஜன சேயராதா மெட்டு

அடாணு ராகம்—ரூபகதாளம்

பல்லவி

தசரத குமாரா விஜய கோதண்ட வீரா (த)

அனுபல்லவி

காசினியோ ரன்பாய்ப் போற்றும்
கோசலக் குமார தீரா (த)

சரணம்

ராகவா தயை புரி என்று காகேந்திரன் சரணடைய—வி
தேகராஜன் குமரியருளால் சோகமற்றுச் சுகமுறக்காத்த(த)

உபசாரமுசேஸே மெட்டு

பைரவி ராகம்—ரூபகதாளம்

பல்லவி

ஏற்றுகின்றோம் ராமா உன்னை
போற்றிப் பாதம் பணிகின்றோம் நாமம் (ஏ)

அனுபல்லவி

மாற்றாந்தாயின் மனங்களிக்க
ஏற்றாய் வரம் இடர்வனம் நடக்க (ஏ)

சரணம்

கல்லின் மீதடி நடந்து நல்லோரனே கரைக்காத்தாய்
பல்லாயிர மரக்கர் குலம் வென்று வந்த வீரமைந்தா (ஏ)

நிந்தாஸ்துதி.

மரியாத காதுரா மெட்டு

ராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்

பல்லவி

ஸரியாகாதையா ஸ்ரீராமா (ஸ)

அனுபல்லவி

சிரிய அம்பினால் வலிய முரங்கைக்கொன்ற
தறிந்திடார்களோ நின்னடியார்கள்—இது (ஸ)

சரணம்

மராமரங்களேழுஞ் சாய்த்து வசைகளேற்ற தறிவோம்
கரன் தம்பியுடன் போரில் மூன்றடி பின்னகர்ந்தாய்—நின்
சரம்பட் டரக்கியுயிர் துறந்திட்டதறியோமோ
நிறைந்த உன் உண்மை நிலையறிந்தாலும்—இது (ஸ)

ஸ்ரீ கிருஷ்ண கீர்த்தனே.

லக்ஷ்மணப் பிள்ளை கீர்த்தனம்—என்னசெய்தாலும் மெட்டு
காம்போதி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

பன்னக சயன பாப விமோசன எனக்குத் துணை நீயே (ப)

அனுபல்லவி

கன்று விளாவெறிந்தாய் காவேரி சூழரங்கா
புன்னை மரத்தமர்ந்தாய் கன்னியர்கண்ணனே (ப)

சரணம்

கஞ்சனைக்காலெறிந்தாய் காளிமீதில் நடித்தாய்
பஞ்சவர்கள் தனக்காய் பாரதப் போர் முடித்தாய்
தஞ்சமடைந்தபேரை அஞ்சேலெனக்காத்திட்டாய்
அஞ்சனவண்ணனே ஆதரிநின் பத்தரை (ப)

மாற்றறியாத செழும்பசும்பொன்னே மெட்டு
சுருட்டி ராகம்—சாபுதாளம்

பல்லவி

பார்த்தஸாரதியேயுன் பாதமேகதியே
காத்தருளவேணும் கண்ணா இத்தினமே (பா)

அனுபல்லவி

கீர்த்தி மிகுந்திடும் திருவல்லிக்கேணிவாழ்
நாற்றிசையும் புகழ் நாரணா செவிசாய் (பா)

சரணம்

பக்தர்களைக் காக்கும் பாப விநாசா
உத்தம வரங்கேசா உம்பர்க்கு மீசா
முத்தர்களா லறியும் முகுந்த வரதா
சித்த மிரங்கிடுவாய் ஸ்ரீ பூமிநாதா (பா)

எமாட்டலாடின மெட்டு

எதுகுலகாம்போதி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

என்ன நான் புகன்றாலும் உன் மன மிளகாமல்
இன்னமு மிருப்பது ஞாயமா உபாயமா (எ)

அனுபல்லவி

கண்ணனே யுன்னிட கழலிணையிற் பணிந்தேன்
எண்ணம் நிறைவேற இரங்காய் பார்த்தஸாரதே (எ)

சரணம்

சீர்புகழ் சென்னைவாழ் செங்கண்மாலே நீயும்
பார்புகழ் வேதவல்லித் தாயும் பாரதியாம்
கார்குழ லன்னையின் காளையர் தனைக்காவாய்
தாராய் நன்மையனைத்தும் தாசர்களானவர்க்கே (எ)

பூரி கலியாணி ராகம்—ரூபகதாளம்

பல்லவி

அரே பாலகிருஷ்ண அசோதை மைந்தாவா (அ)

அனுபல்லவி

தீராய் எந்தன் பாசபந்தம் நேராய் வந்து சேவைதா (அ)

சரணம்

உத்தமி ருக்மணி நேசா சித்தஜரூபப் பிரகாசா
மெத்தவும் வேண்டினேனுனை பக்திதாராய் ஈசா (அ)
குடதிசை யக்கிரகாரத்தில் கோமளாங்கி மனையில்
கடல்நிறவண்ணனே நீயும் காட்சி தந்தது போல் (அ)

ஏமி கோபமென்குடு மெட்டு

ராகம் யதுகுல காம்போதி—திருபுடை தாளம்

பல்லவி

யாதவ மணிகுழல் ஊதும் இசையைக் கேட்க
மாதர் மாமணியே வாராய் ப்ருந்தாவனத்தில்
அசோதை மைந்தனுங் கண்ணனிராதைப் பிரியனும் நந்
போத மளிக்கும் அரங்கன் பாதம் பணிய (யா)
ஏனோ என்மேல் கோப மென்ன வினை செய்தேனோ
மானே மதன கோபாலன் வரவுங்காணேன் (ஏ)
கான லோலனும் காளிந்தி கைப்பிடித்தான்
ஏனோ யானெதிர் கொண்டேனே அடி ஸகியே (ஏ)
பாமா வலையிற் சிக்கிப் பரவச மாயிருக்கும்
சாமி ரங்கேசனையே சரணடைவோம் (ஏ)

தேரிமேரி ஜோடி பசி மெட்டு

பலராமா னுஜதேவா பாலப்பிரதாப லோலா
பாலமுதம் உண்டு பாண்டவர்க்குத் தொண்டாய்
ஞாலந்தனை வென்றாய் ஆலிலைத் துயின்றாய்
மாலரங்கா காவாய் (பல)

நாரதாதியர் புகழ் நாரணனே
பாரதர்களைப் பரிபாலித்திடாய்
தீராவினைகளைப் போக்கும் திருமகள் நேசா
தரிசனந்தாராய்ப் பரிஜனம் சூழ கரிவரதா. (பல)

திருமாலிருஞ் சோலையழகர்

கொனியாடின நாபை மெட்டு

காம்போதி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

கொண்டாடியே பணிந்தேன் மாலிருஞ் சோலை ஈசா (கொ)

அனுபல்லவி

தண்டுழாய் மார்பா தாமரையாள் நாதா
அண்டர் பூஜிக்க அவண் வந்த அழகேசா
கா-கமககரி-ரிகரிரிஸ-ரிகரிஸநித-பதஸரிகரிரி
ஸாரிஸநி-தாநிபாத பதஸரி-கமகரி-மகரிஸ-பமகரி
தபமக-நீநிதப-ஸநிதப-மகபதஸரி-கம-கரி
ஸரிஸா-மபதநி-பத மதபா ஸஸாணி பதஸரி (கொ)

சரணம்

சோலைமலைவாழ் வைகையாற்றின் நடுவில்
மாமண்டூக முனிவர்க் கருள்செய்ய
நீலவடியலங் காரனே நீயும்
காலைப் பொழுதேகடிமாவின்மீ தேரியே
லீலையாகக் கள்ளக் கொண்டை யிட்டுவர
நிரதி சயானந்த அன்பர்கள் கூடிவர
பாலர் முதியோர்கள் பணிந்து போற்றிவர
ஓலமிடும் முதலையைக் காத்த ஹரி (கொ)

துரிதம்

ஞாலமுண்ட வைபோக சுந்திரா
நீலகண்டனரசி ஸோதரா
மாலரங்க பக்த மனதிலமர்ந்தோனே
சராசரம் நீயே யாகும் சுந்தரா (கொ)

திருப்பதி ஸ்ரீனிவாஸன்.

ஸ்ரீராமா ஸ்ரீஸார்வ பௌமா மெட்டு

ராகம் மத்ய மாவதி—தாளம் ஆதி

பல்லவி

ஸ்ரீனிவாஸா ஸ்ரீ சைலாத்திரி நாதா (ஸ்ரீ)

அனுபல்லவி

மானிலம் புகழ்ந்திடும் மாமலைவாஸா
கோனேரி யருகில்வாழ் கோமள விலாஸா (ஸ்ரீ)

சரணம்

சீல சித்தமருளும் ஸ்ரீ வேங்கடேசா
கால மறிந்துலகை காக்குங் கமலேசா
மாலே மாயை விலக்கும் மாமகள் நேசா
மூலக் காரணமாய் முழங்கு மரங்கேசா (ஸ்ரீ)

ஸாது ஜனரட்சக ஸர்வதயாபரா
மாதவத்தோர் மனம் மகிழும் மனோகரா
காதகரைத் தொலைக்கும் கலியுக வரதா
பாதார விந்தங்கண்டோம் பாபங்கள் தீர (ஸ்ரீ)

திருக்குடந்தை சாரங்கபாணி.

இங்க தயராலேதா மெட்டு

ராகம் சக்ரவாகம்—ஆதி தாளம்.

பல்லவி

எந்தாய் சாரங்கேசனே தாராய் வரம்
இந்திராதி தேவர்க்கு மீசா அரங்கேசா (எ)

அனுபல்லவி

சந்திர சூர்யாதீசா சதுர்முக பூஜித
சுந்தர வதனா வந்தனம் ஆசிதா (எ)

சரணம்

தந்தை தாயும் தாரமும் மக்களும்
பந்தமாய பாரமா மலையே

இந்தப் பந்தம் என்று முதவா
உந்த னுலகிற்கேக வென்றால்
சிந்தை யிரங்கியே ஸ்ரீ ஹரியே
எந்த னிருதயத்தி லுகந்திருக்கும்
சுந்தரி கோமளாங்கி நேசா நீ
வந்தெம் குறை தீராய் அரங்கேசா (எ)

அரங்கநாதன் கீர்த்தனம்

மரிவேரதி மெட்டு

ராகம் ஷண்முகப் பிரியா—தாளம் ஆதி

பல்லவி

கருணை வைப்பாய் காவேரி ரங்கா
தருணம் காத்திடவா நிஷ்களங்கா (க)

அனுபல்லவி

சிறியா னென்றெனைக் கூறியகன் றனை
பரிபாலித்திடும் பாரம் நினதென்றாய் (க)

சரணம்

உன்னை நம்பினோர்கள் உய்யும் வகைதனை
மண்ணில் மாந்தருக்குச் சொன்னதுந்தன் வேதம்
பன்னகசயனா இன்னமென் மேல்வாதா
உண்மைப் பொருளே என் கன்மங்களைத் தீராய் (க)

த்யாகராஜாயநமஸ்தே மெட்டு

ராகம் பியாகடை—தாளம் ரூபகம்

பல்லவி

நாகராஜசை யாஸனமமர் நாதனே (நா)

அனுபல்லவி

பாகவதர்பணியும் பரமனே பதுமாஸனிபதே (நா)

சரணம்

வான்மீகாதி முனிவர்கள் மகிழ்ந் தேற்றும் மாமணி
நான் முகவானுதியர்தொழும் வானகம் வையம் நிறைமணி
கான்புகுந்த ராமனேற்றுங் காவேரி நடுவமர்மணி
தேன்கமழுந் தமிழ்நாடுறையுந் திருவரங்க மாமணி (நா)

மஹாதேவ ராதியர்தொழு மாதிமுதல் வேதனே
ககாதிபதி ஸதாபூஜிக்குங் கல்யாணகுண நாதனே
மகரகுண்டல மணிசோபித மஹாப்பிர காசனே
மகாபலி பணிந்தபாத யோகீச்வர ஈசனே
ஜகாதாரனே சிந்தை தீர்மஹா இலக்குமி யுறை மார்பனே
மகாயோகிகள் மிகப்பணியு மகாமுத லெழுத்தையனே
திகம்பரர்கள் அகமகிழும் திருமூர்த்தி முதல்தேவனே
யுகங்கள் தோறும் ஜகங்களுய்ய அரங்கமா நகரோனே (நா)

எந்தநேர்ச்சின மெட்டு

ராகம் சர்வேரி—தாளம் ஆதி

பல்லவி

அன்னமே அரங்கன் அணிதிருத் துழாய்
இன்னமு முகர்வாய் இனிசென்ம மெடாய் (அ)

அனுபல்லவி

இன்ன முதத்திரு மாது மணவாளன்
தண்ணந் துழாயையே அணியு மன்பாளன் (அ)

சரணம்

முன்னைப் பிருந்தையாகி முனிந்து சென்றாலும்
கண்ண னென்றாங் கண்டு உகக்குங் கருந்துழாய்
இன்னல் களைப்போக்கிப் பின்னும் ஜன்மம் நீக்கி
அன்னை இலக்குமி யருகினிற் சேர்க்கும் (அ)

எப்போதானிரங்குமோ மெட்டு.

ராகம் சங்கராபரணம்—தாளம் ஆதி.

கண்ணிகள்.

அப்பனே யரங்கனே அருமாமறைப் பொருளே (அ)
இப்போதும் வீடணன்வாழ் இலங்கைதனை நோக்கும்
எப்போது நின்மனம் யிரங்கி யருள்புரியும் (அ)

மெய்ப்பொருளேயுனை மேவித்துதிக்கும்பத்தர்
கைப்பாம்மாயைநீக்கி மெய்ப்பதம்பெருமுத்தர் (அ)
வைப்பாயுன் னெஞ்சில் என்று வந்தித்தேனே
உய்ப்பிப்பாயிப்போதே பைப்பாம்பணையப்பனே (அ)

ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே மெட்டு

ராகம் காம்போதி—தாளம் ஆதி.

பல்லவி

ஸ்ரீரங்க ராஜனே சரணம் சரணம் பெருஞ் சோதி
உரக சயன ரவிகுல பூஜிதா தருணம் (ஸ்ரீ)

அனுபல்லவி.

காரங்கமேனிக் கருமாலே காவேரிநடுவமர்ந் திடுமாலே
ஆரங்கணிநிறை யணிமாலே ஆதரித்திடும் திருமாலே

பாரங்கதர் பணிந்திடும்மாலே பரவாசுதேவ ரங்குமேலே
ஏரங்கசாயி எனநாவரலே இருசெவிபட பத்தர்கூறவே (ஸ்ரீ)

சரணம்

தசரத அரசமைந்தன் பின் சீதை இலக்குமன் தொடர்ந்திட
விஜயவீரர் விடுங்கணையால் விராதனுயிரும் ஓடுங்கிட
திசையதிரத் தீங்கியற்றிடும் சூர்ப்பனகை மூக்கறிந்திட
விசையாய் ராவணன் சீதையுடனேக வீரரிவரும் நடந்திட
விஜயம் வானவர்க்களித்திட வீசிய அம்பாலரக்கர்மடிய
திசையில் வீடணர்க் கரசீந்திட தாசரதியும் வணங்கிய (ஸ்ரீ)

சரணக்கமலாலயத்தில் மெட்டு.

தருணமிது தென்னரங்கா வரமளியுவந்துரங்கா
கருணைசெய் கஸ்தூரி ரங்கா கருமாலே
ப்ரணவமயப் பொன்னரங்கா சரணம்பணிந் தார்க்குரங்கா
பூர்ண தெய்வம் நீயே ரங்கா அருளாயே
பரமபத நாதன்நீயே பாரளந்த ஈசன்நீயே
நிர்மல ஸ்வரூபன் நீயே நினைப்போமே
தர்மாவ தாரன்நீயே துவாரகா புரீசன்நீயே
சரணகம லமதையே யடைவோமே

வானமாமலை தெய்வநாயகன்

மாத்தாட பாரதேனோ மெட்டு.

ராகம் கமாஸ்—சாபு தாளம்.

பல்லவி

தோதாத்திரி நாதனே தெய்வ நாயகனே (தோ)

அனுபல்லவி

பாதகம் பலதீர்க்கும் மாதவ முனிபோற்றும் (தோ)

சரணம்

மாதுஸ்ரீவர மங்கை மகிழும் மனோகரா
சேற்றுத் தாமரைப் பொய்கை தன்னிலுதித்தவா (தோ)
வானமாமலை வாஸா வைகுண்டபதி ரங்கேசா
ஞான முனிவர்தொழும் நான்கூனேரி வாழீசா (தோ)

காஞ்சீபுரம் வரதராஜன்.

நகுமோமுகனலேனி மெட்டு

ராகம் ஆபேரி—தாளம் ஆதி

பல்லவி

புகலெங் கிலுங்காணே னுந்திபூத்தோ னேகரிவரதா
அகலா தன்புகொண் டென்றும் ஆதரித் திடும்நாதா (பு)

அனுபல்லவி

அகமலர அருள்பொழியும் அத்திகிரிப் பெருமாள்
உகப்பாயெமையே உய்விக்கவருவா யத்திகிரிமாலே (பு)

சரணம்

எண்டிசையும் எழுகடலும் ஈரேழுலகமும்
அண்டர் தலைவன்அயன் அரும் வேள்விக்கிரங்கியே
தொண்டை மண்டல நாட்டினின்றாய காஞ்சியிலமர்ந்தாய்
மண்டலம் போற்றிடும் தண்டுழாய்மாலே கண்டுனையடைய
(பு)

திருநாராயணபுரம் செல்வப்பிள்ளை.

பேயாண்டிதனை வேண்டி மெட்டு

ராகம் காம்போதி—தாளம் ஆதி

பல்லவி.

திருநாராயணபுரம் தரிசனஞ் செய்திட
வருவேனோ ஒரு நாளேனும் (தி)

அனுபல்லவி

கருமுகில் வண்ணனே கருடனை யாட்கொண்டாய்
குரு மைந்தனைத் தந்த கோகுலச் செல்வப்பிள்ளாய் (தி)

சரணம்.

ராமானுஜர் பணியுந்தாமரைக் கண்ணனே
காமராஜனை ஈன்ற சியாமள வர்ணனே
பூமியிலுள்ள ஆதித்திராவிடர்களுந் தொழும்
நியமம் நிறைந்த திருநாரணனேசரண் (தி)

திருவள்ளூர் வீரராகவன்.

உண்டேனருளமுதம் மெட்டு

கானடா ராகம்—தாளம் ஆதி

பல்லவி

கண்டேன் திருவள்ளூரில் கண் களிக்கவே யான் (க)

அனுபல்லவி

விண்டேன் யான் விசனமே வீரராகவனிடை (க)

சரணம்

இருவினையகற்றி எமையாட்கொள்ளுமையனே
திருவள்ளூர்தனில்வாழும் தீரகோதண்டையனே
திருவன்லட்சுமணனுடன் சீதைதயவுடனும்
தருவாய்இத்தாரணியில் எளியோர்களுக்கு நன்மை (க)

கார்க்கோடக நல்லூர் பிரஹன்மாதவன்.

மானேயங்கே போன வயணமென்னடி மெட்டு

அடாணு ராகம்—ரூபகதாளம்.

பல்லவி

கார்க்கோடகபுரவாஸா கருணாகர கமலவதன (கா)

அனுபல்லவி.

சேற்கெண்டைநீந்துமாற்றின் அருகிலமர்ந்தநாதா (கா)
மலையஜபுத்திரி மணிமஹாநதி தாம்பிர வருணீ
அலையடித்து அழகாய்வரும் நிலமுகந்த ஸ்ரீநாதா (கா)
அடியார்க்கருள்பாலித்த ஆதிபரங்கேசனே
குடையாங்கார்க்கோடகன் உறைந்த இடமிருக்கும் (கா)
கஸ்தூரிரங்கனின் திருக்குலக்கருமாமாணிக்கமே
அஸ்தாபயம்கொடுத்து ஆதரியன்பர்தனையே (கா)

ஸ்ரீவைகுண்டம் கள்ளப்பிரான்.

கலிநருலகு மஹிமலு மெட்டு

ராகம் குந்தலவராளி—ஆதிதாளம்

பல்லவி

கள்ளபிரானேஎன துள்ளந்தனிலமரும் தனமுனக்கிய
லாதா (க)

அனுபல்லவி

உள்ளந்தனிலுறைந்தாய் ஒளிவிளக்காய்பக்தர்க்கே
தள்ளிவிடலாகுமா தையலரங்கமெனையே (க)
அவனியிலென்போன்ற அருந்துயருறுவோரை
கவனியாதிருந்திடல் கருணைவள்ளலதாமோ
உவமையொருவரில்லா உலகளந்தபாதனே
தவமுமியற்றவல்லேன் தருணங்கருணைசெய்வாய் (க)

திருக்குருங்குடி நம்பி

எந்துகுபெத்தல மெட்டு

ராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி

உந்தனைநம்பினேன் சுந்தரபரிபூரண
சிந்துநதிபாயும்தென் குருங்கைநகர்நம்பி (உ)

அனுபல்லவி

நந்திருப்பார்க்கடல் ஆடிநலனடைந்து
உந்தன் ஸ்ரீவைகுந்தம் பெற்றுய்யநலனையா (உ)

சரணம்

வண்டுலாவும் மலர்க்குருங்கைநகர்
தொண்டர் தூயவர் தொழுதேற்றிடும்நகர்
பண்டுமாவலியைப் பாதளமதிலமுத்திக்கால
கண்டன் தன்னையே அன்புடனமர்த்திய (உ)

திருவனந்தபுரம் பத்மநாபன்.

ஸாலுரயீமோஹமு மெட்டு

ராகம் கமாஸ்—ரூபக தாளம்

பல்லவி

அனந்தசயனந்தனில் அமர்ந்திருப்போனே (அ)

அனுபல்லவி

தினமரசன் பூசைசெய்யும் திருவனந்தபுரீசா (அ)

சரணம்

ஜகத்திலுள்ளோர்க்கன்னமீயும் சேரபூபாலனும்
இகத்திலின்பமடைந்து இன்னும்பல்லாண்டுவாழ (அ)
எத்திசையிலும்உந்தன் ஒற்றைக்கல்காண்போமோ
பத்மநாபனேயுந்தன் பள்ளிதனைப்போலவும் (அ)

ஏரா ராரா செய்தோரா மெட்டு

பியாகு ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

பாராய்காவாய் பாதாம்புஜந்தாராய்
பத்மநாபனே பலதேவா (பா)

அனுபல்லவி

சேரமன்னர்க்கருளும் சேஷசயனுதாரா (பா)

சரணம்

ஸனகாதியர்க்கு ஸாயுஜ்யமளித்தாற்போல
மனவிருளகற்றும் மாயலீலாவினோதா (பா)
பரமபதநாதாபாசம் தீர்த்தாற்போல
வரமளித்தெனக்கே வைகுந்தபதந்தாராய் (பா)

திருமால் துதி.

ரகுவம்சஸுதா மெட்டு

ராகம் கதனகுதூஹலம்—ஆதிதாளம்

பல்லவி

பரிபூர்ணமாயப் பெருமாநிதியே
பக்தர்க்கருள் செய்யும் கருணாநிதியே (ப)

அனுபல்லவி

திருமூர்த்தியாய் தேவதேவனாய்
அருள்பாலித்திடும் ஆத்மரஞ்சன (ப)

சரணம்

இராதைசுந்தரா கோதைமணாளா
வாதைதீர்த்திடாய் சோதைநந்தனா
பாதம் பணிந்தேன் பாரதரைக்காவாய்
நாதப்பிரம்மமாய வேதரங்கேசனே (ப)

கத்தனவாரிகிகத்து மெட்டு

ராகம் தோடி—ஆதி தாளம்.

பல்லவி.

மெத்தமனம்நொந்தேன் தேவாசிற்றடிபணிந்தேன்மூவா
உத்தம த்ருவவரதா சற்றேதயை வைத்துவா (மெ)

அனுபல்லவி.

இத்தினமுனைக்காண ஒத்தபாக்கியஞ்செய்திலனே
சுத்தஸத்குணப்பரமே குற்றந்தீராயிக்கணமே (மெ)

சரணம்.

அன்னை தந்தை குருதெய்வம் ஆறறிவும் ஐம்பொறியும்நீ
இன்னிலத்தி லுன்னதமா யெந்தநெதிரில் தோன்றியே
பன்னகசயனனேநீ பாரத பத்தரைக் காவாய்
மன்னித யம்குடிகொண்ட பொன்னரங்க நாயகனே (மெ)

ஆடமோடி கலதோா மெட்டு

தோடி ராகம்—ஆதிதாளம்

பல்லவி

மாயைநீக்கிவரந்தாராய் மானிடர்க்கே. (மா)

அனுபல்லவி

தாயகம்நீஎன்று சேயர்நின்கீழ்நின்று
ஆயனேகன்று காத்தோனேஎன்றுமேஎம் (மா)

சரணம்

பாதிநிசிதன்னில்பாவை தேவகிக்கே
சோதியுருவாய் அவதரித்துகந்த

மாதவனேவாராய் மாயவினை தீராய்
அசோதைபாலகனுய் கீதைமுற்றுமுரைத்தாய் (மா)

ஈதினமே ஸுதினமு மெட்டு
ராகம் லதாங்கி—ஆதிதாளம்.
பல்லவி.

மனமேமருட்கொள்ளாதே மாலினைநம்பு
தினமும்வந்தருள் புரிவார் (ம)

அனுபல்லவி

கனமேயடைவாய்நீ கரியினைக்காத்தபிரான்
நினைவேயடைந்துநீ நிமலன் பாதமடைவாய் (ம)

சரணம்

சரணமடைந்திடுவாய் சங்கசக்கரவரங்கன்
கருணைமிகப்பொழிவார் கன்மம் கரைந்திடலாம்
தருணம்தானினைப்பாய்த் தாரகநாமன்பாதம்
வருடிவலம்வந்து பரிவாய்ப்பாதமடைவோம் (ம)

இன்னும் வரக்காணேனடி மெட்டு
ராகம் பரசு—ஆதிதாளம்
பல்லவி.

மாதர்களேவாருங்கள் மாதவனடியினை (மா)

அனுபல்லவி

ஆதரவாயடைந்து அகமகிழ்ந்துதுதிப்போம். (மா)

சரணம்

பாதந்தனில்பணிந்து பாபங்களைத்துறந்து
ஆதரவளியென்று அருகினிற் சென்றிறைஞ்சி

வாதைதீர்த்துவரம்தாராய் நற்கதிசேராய்—என
இராதைமணாளனை மரங்களைப்பணிந்திட (மா)

சாமளசுந்தரன் ஸர்வதயாபரன்
கோமளநிரதேஹன் கோபியர்கள்நேசன்
பாமாருக்குமணிநாதன் அரங்கமுறைவாஸன்
நாமமாயிரமுற்ற நாரணனையடுக்க (மா)

ஏமாட்டலாடின மெட்டு

ராகம் எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

பல்லவி

அரவிந்தலோசனா ஆருயிரனையவா
வரும்வழிநோக்கியான் வாடினேன் (அ)

அனுபல்லவி

அரிஅயன்அரனாகி • ஆதிமூலமுமாகி
பரிதிமதியாய் நின்றபரம்பொருளேநினை (அ)

சரணம்

ஸாரமற்ற உலகைத்தாரக மென்றுன்னி
காரிருளில் மூழ்கிக்கவலையற்றுழலும்
சீரியஜீவர்கட்கு ஞானச்சுடர்விளக்கே.
பாரதரங்கம்பணி பார்த்தஸாரதியே (அ)

ஸனிதோடிதேவே மெட்டு

ராகம் ஹரிகாம்போஜி—ஆதிதாளம்.

பல்லவி

மகிழ்ந்தோடி வாராய்மாதவமணி (ம)

அனுபல்லவி

திகழ்திருமார்பனே தேவர்கள்முதல்வனே
மகிழ்மறைநாதனே மாவுறைமார்பனே. (ம)

சரணம்.

மதியிரவிநயனுமாலே மாமணிவண்ணு
நதிநடுவில்சயனு நான்முகனுர்க்கும்நாதா
பதியாம்பாற்கடல்தனில் படுத்தபராபரனே
முதல்வனேமறைதந்த மோட்சப்பிரதாயக (ம)

தொலிஜன்மமுனசேயுதுடுகு மெட்டு

ராகம் பிலஹரி—ரூபகதாளம்.

பல்லவி

ஆலிலைத்துயின்றஆதிதேவா ஞாலத்துயர்நீக்கவா (ஆ)

அனுபல்லவி

ஜாலமேனுைலகுணகரனே காலமேனுகாவவேவா (ஆ)

சரணம்

நாகசயனுகி நடுக்கடல மர்ந்ததறிவோம்
ககராஜன்மீதிலேரி கரிகாத்ததறிவோம்
வியூஹவைகுண்டம் வீற்றிருப்பதறிவோம்விபுவே
போக மோட்சப்பிரதாயகப் பிரபுவே (ஆ)

எவரனி நிர்ணயிஞ் சேதிரா மெட்டு,

தேவாமிர்தவர்ஷணி-ராகம் தாளம் தேசாயி

பல்லவி

சிவரூபனென்றவனை தரிசிப்போமாயினும்
பவபயம் தீர்த்துப் பாலிப்பான் அரங்கனும் (சி)

அனுபல்லவி

எவர்திருநாமம் கரிக்க பயமளித்ததோ
அவனேயவனி விட்டேகும் போதும்புகல் (சி)

சரணம்.

போகநித்திரையிற் சிறந்த நாகசயனன்-உயர்
வாகக்ஞானமமைந்த வாமபாகனுயர்—ஸங்
தேகந்தெளிந்தவர்கள் தாக்கிடார்வசைமொழி
ஆகமமுதற்பொருள் அகர - உகர - மகரம் (சி)

நேராகவந்தவர் ஆர் ஸகி மெட்டு,

ராகம் சங்கராபரணம்—தாளம் ரூபகம்.

எந்தனெதிர்வந்தாரடி ஸந்ததமும் நீ கூறடி (எ)

மந்தாரமாலையுடன் கந்தர்ப்பனையீன்றோன்
பந்தமனைத்தும் நீக்கும் பரமபதநாதன் (எ)

சங்கசக்கரத்துடன் சாந்தஉருவாகி
மங்களவடிவழகனங்கன் அணியரங்கன் (எ)

பச்சையுடையணிந்தோன் பாதத்தில்கங்கைவந்து
இச்சகந்தனிலுள்ள எச்சன்மமுமீடேற (எ)

முத்துக்குமரையனே மெட்டு,

ராகம் சங்கராபரணம்—தாளம் ரூபகம்.

லீலாவினோதாஹரே நீலமேகசியாமளா (லீ)

பாலனும்பிரஹ்லாதனுக்கருள த்தூணில் வந்த லோலா
ஆலிலையில்பள்ளிகொண்ட உயர்லீலா கோபால (லீ)

பக்தன்பலியினுற்றதலையில் சித்தடியைவைத்து
மெத்தப்பேருருவங்கொண்ட அத்தா விசித்திர (லீ)

மலைமகள் வணக்கம்.

கொலுவமரெ காதா மெட்டு.

ராகம் தோடி—ஆதிதாளம்

பல்லவி

பரகதிதந்தருளும் பாகிபராசக்தி (ப)

அனுபல்லவி

நரசிம்மன் சகோதரி நாராயணி கௌரி
திருபுரசுந்தரி தீரிடுக்கண் பராபரி (ப)

சரணம்

பக்தர்கட்கனுகூலி பாபவிஞசினி
ருத்திரனருடிணி நித்தியானந்தரமணி
முத்திதருமுகுந்தனுடன் பிறந்தபார்வதி
சத்திசதாசிவ பத்தினி பரமேச்வரி (ப)

நாட்டி மாட்டமரசிதிவோ மெட்டு,

ராகம் தேவக்ரியா—ஆதிதாளம்,

பல்லவி

ஸாமகானப்பிரியரமணி சதாசிவ (ஸா)

அனுபல்லவி

தாமதம் செய்யாதினி காமதகனன்ஸதி
சோமசுந்திரன் இராணி காமினிகாத்தியாயனி (ஸா)

சரணம்

தரணிமாந்தர்தனையே தயவுடன்காத்திடாயே
கருணைமிகப்பொழிவாய் காமசுந்தரித்தாயே

வருணித்திடவென்னால் வசமாமோ வரதையே
திருவரங்கன்சோதரி தீர்ப்பாய் சிறைதேவியே (ஸா)

த்வாதசராக மாலிகை.

நித்ய கல்யாணி மெட்டு,
ராகம் கல்யாணி ரூபகதாளம்.

நித்தமடிபணி பத்தர்க்கருள்பார்வதி
முத்திபலப்பிரதாயனி சக்திகலியாணிசம்புஸதிநீ (நி)

தோடி.

ஆதியந்தமற்ற தேவி அகிலலோக ஈச்வரீ
பாதியுடல்பரமேசன் அளித்தார்நினக்கேபசுந்தோடி (நி)

நாயகி.

பூதனையினுயிர் கொன்ற புவனநாதன்சோதரி
புதுக்கோடதனில்வாழும் பூதநாதன் நாயகி (நி)

பைரவி.

மகிஷாசுரமர்த்தனி மாதவி மாயபைரவி
நிகிலலோகசஞ்சாரிணி நீலாயதாக்ஷிணி (நி)

காம்போதி.

கமலதளலோசநி காமினிகாம்போஜி
சியாமளசுந்தரி சம்புப்பிரியபார்வதி (நி)

கானடா.

காளிதாஸனைக்காத்த கன்னட காத்தியாயனீ
பாலிபரமசிவத்திருசூலி தீரரமணீ (நி)

நாட்டைக்குறிஞ்சி.

இமயவரசன் மகளே எங்கு முந்தன்புகழே
சமயம்நாட்டைக்குறிஞ்சி பாடினேனுன்னழகே (நி)

கமாஸ்.

காளிக்கெதிர்நடித்த காமசுந்தரனை
காளைவாகனன் மகிழ்காந்தாமணீநீயே (நி)

நீலாம்பரி.

நீலாம்பரதாரிணியம்பா பாலிபசுபதிராணி
சிலாவிக்கிரக உருவச்சின்மயானந்த சுந்தரி (நி)

ஆனந்தபைரவி.

மானவரையும் காக்கும் மஹாதேவர் ஆவி
ஆனந்தபைரவர் அனைவர்க்கும்தேவதேவி (நி)

தேவகாந்தாரி.

திருபுரசுந்தரியே தேவகாந்தாரப்பிரியே
கிருபாகரிபுரந்தரி கேசவன் சோதரியே (நி)

பூபாளம்

ஸர்வதயாபரி சக்தி ஸ்ரீரங்கன்தேவிமித்திரி
பர்வதராஜனின் புத்திரி பாலிபூபாலசக்தி. (நி)

ராகம் சௌராஷ்டிரம்—ஆதிதாளம்.

நீஜமஹரூபமுலகு மெட்டு,

ஸ்ரீ ரங்கநாதனுக்கு நித்திய ஜயமங்களம்.
பாரெங்கிலும் பக்தர்கள் காவாஎன்றுகை கூப்பும் (ஸ்ரீ)
தென்னிலங்கையரசாளும் மன்னன்விபீஷணர்தொழும் (ஸ்ரீ)
தோலா இராமன்தொழும் நால்வேத சிருங்கம்வாழும் (ஸ்ரீ)
இருமருங்கில்காவேரிசூழ் திருவரங்கநாயகிக்கும் (ஸ்ரீ)

துமாஜாஜனியாச மெட்டு,

மங்களங்கள்பாடிடுவோம் அரங்கநாதர்க்கே
செங்கமல வல்லியுடன் எங்குமருள்பொழிய (ம)

பொங்கும்நதிக்காவேரி மத்தியிலமர்ந்தாய்
எங்கும் நிறைந்தஈசனே மங்களம்தாராய் (ம)

மூவுலகமுண்டு மிழ்ந்தமுத்தி முதல்வா
ஏவல்செய்வோ மெங்களருந் தெய்வமே. (ம)

முற்றிற்று.

மதிப்புரை.

இந்தப் புத்தகத்தின் ஆசிரியையால் முன்னம் பிரசுரமான 'காந்தி சரித்திரக் கும்மி' என்ற புத்தகத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் வெளியான அபிப்பிராயங்கள் :—

சுதேச மித்திரன் 3-2-1923.

அஹிம்ஸா தர்மத்தையும் சத்தியத்தையும் இரு ஆயுதங்களாகக் கொண்டு அசத்தியத்தோடு போராடி பாரத நாட்டினரைத் தூக்கத்தினின்றும் விழிக்கச் செய்து தற்போது எரவாடா சிறையில் அதிகாரவர்க்கத்தினரால் காவலில் வைக்கப்பட்டுள்ள காந்தியடிகளின் சரித்திரத்தை ஸ்ரீமதி எஸ். ரங்கம்மாள் கும்மிப்பாடல் ரூபமாக இயற்றி, இதன் பிரதியொன்றை நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார். இப்புத்தகம் ஒரு பெண்பாலால் இயற்றப்பெற்றது சாலவும் சிறப்புடையது. அதோடு பெண்மணிகள் பாடிக் களிப்பதற்கேற்றவண்ணம் கும்மிப்பாடலாகச் செய்யப்பட்டிருக்கின்றது. கலியாணம் முதலிய விசேஷ காலங்களில் இப்பாட்டுகளை ஸ்திரீகள் மனப்பாடம் செய்து பாடுவார்களானால் நாட்டிற்குச் சேவைசெய்தவர்களாவார்கள். அதோடு பாடுவோருக்கு தேச பக்தியும் உதிக்கும். இப்புத்தகம் சுதேசமித்திரன் பிரான்ஞ்சு அச்சுக்கூடத்திலேயே பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. சுதேசமித்திரன் ஆசிரியர் இதற்கு முகவுரையெழுதியுள்ளார். நம் நாட்டு சகோதரிகளுக்கு தேசீய விஷ

யத்தில் அதிக ஊக்கத்தை உண்டுபண்ண இப்புத்தகம் உதவியாக யிருக்க வேண்டுமென அவர்கோரியிருக்கின்றார். இதன் விலை அணா நான்கு. வேண்டுவோர் 'மித்திரன்' புத்தகசாலைக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

சுதேச பரிபாலினி இரங்கோன் 21-2-1923.

ஒரு நாட்டுத் தேசபக்தரைப் பலரும் அறியுமாறு செய்வதற்குவழி அவரைப்பற்றி ஸ்திரீகளும் பாமர ஜனங்களும் அறியும்படியான சிந்து, கும்மி முதலிய பாட்டுக்களால் அவர் சரிதத்தைப்பாடிப் பிரசுரிப்பதே. தற்காலம் மஹாத்மாவைப்பற்றி எல்லாரும் அறியும் வண்ணம் அனேகம் சில்லரைப் பாட்டுப் புத்தகங்கள் வெளிப்பட்டுள்ளன. சுத்தத் தாளிலும் முத்துப்போன்ற எழுத்தில் மஹாத்மாவினுடைய அழகிய உருவப்படத்துடன் வெளியிட்டுள்ள புத்தகம் இது ஒன்றே. அதுவும் ஒரு பெண்மணி யெழுதியது. அதற்குச் சுதேசமித்திரன் பத்திராதிபருடைய முகவுரையும் உள்ளது. இப்புத்தகத்தால் வரும் ஊதியத்தில் ஒரு பகுதியைத் திலகர்ஸ்வராஜ்ய நிதிக்கு அனுப்ப உத்தேசித்திருப்பது பின்னும்அம்மாதின் தேசாபிமானத்தைக் காட்டுகிறது. இலகுவானநடையில் மாதர்கள் பாடக்கூடிய கும்மி,காவடிச்சிந்து, இந்துஸ்தானி முதலியலேசான வர்ணமெட்டுகளில் நம்நாட்டுப் பெண்குழைந்தைகள் பாடத்தக்க விதமாக அமைத்திருக்கிறார்.

தமிழகம் கோலாலம்பூர். 5-3-23

மஹாத்மா காந்தியின் சரித்திரத்தைப் பெண்களும் பாடிப் புகழும் வண்ணம் சுலபமான கும்மிப்பாட்டுகளில்

பாடப்பட்டிருக்கின்றது; இதன்விற்பனையினால் கிடைக்கக்கூடியதில் ஒருபாகம் திலகர் சுயராஜ்ய நிதிக்குக்கொடுக்கப்படுமென்றும் அரிவிக்கப் படுகிறோம். மஹாத்மாவின் புகழை மனங்கொண்டபடி யெல்லாம் பாடிப்புகழுந்தாலும் சலிக்காததாகப் பெண்களும் கொண்டாடிக் கும்மியடிப்பது யாவருக்கும் ஆனந்தத்தையே கொடுக்கும்.

லோகோபகாரி சென்னை 5-4-1923

ஸ்ரீமதி எஸ். ரங்கம்மாள் இயற்றிய காந்திசரித்திரக் கும்மி என்ற சிறிய புத்தகம் வரப்பெற்றோம். மஹாத்மா காந்தியின் சரித்திரம் மாதர்களுக்கும் விளங்கக்கூடிய எளிய நடையில் பலவிதமெட்டுகளுடன் இதுபாடப்பட்டிருக்கிறது இதனையியற்றிய சகோதரிக்கு நாம் வாழ்த்துக் கூறுகின்றோம். பெண்கள் ஒவ்வொருவரும் இதனைப்படித்துப் பயனடையலாம்.

தக்ஷிணமித்திரன் மதுரை. 19-2-1923

இந்தியராஜீயவாழ்வில் சிரத்தைகாட்டிவரும் நம் நாட்டுஸ்திரீகளுக்கு இதுமென்மேலும் ஊக்கம்கொடுக்குமென எண்ணுகிறோம். இதன்வருவாயில் ஒரு பாகம் திலகர் சுயராஜ்ய நிதிக்குக் கொடுப்பதாக நமக்கு அறிவிக்கப்படுகிறது.

Opinions

ON

GANDHI KUMMI.

By the Same Author.

THE HINDU.

Dated 31st March 1923.

This booklet, with an introduction by Mr. A Rangaswamy Iyengar, contains interesting "Kummys (songs) describing the principal events of Mahatmaji's life and his achievements. The young authoress, S. Rangammal, has taken great pains to collect all available information relating to the meritorious career of the Mahatma and to present them, clothed in melody, to her readers. The songs are to be sung on marriage occasions and festival days and the publication is but an index of the deep interest taken by the daughters of India in the national movement and their love and veneration for the "Saintly Politician." Copies can be had of the "Swadesamitran" Bookshop or from the author, No. 64, Tanna Street, Pursawalkam Madras at As. 4 per copy. It is stated that 25 per cent of the profits resulting from the sale of books will go to the Tilak Swaraj Fund.

SWARAJYA

Dated 22nd March 1923.

By Kodakanallur S. Rangammal. Published by the Swadesamitran Press, Price annas **4**.

This tiny volume of Songs is yet another eloquent testimony to the deep interest that our sisters have come to take in the great national movement. The songs are modelled on well known mettus and in succession relate the story of Mahatmaji's life and his achievements. The ideas flow freely and the style is easy and polished. Mr. A. Rengasami Aiyangar writes an appreciative foreword. Copies can be had of S. Rangammal No. 64, Tana Street, Purasawalkam Madras.

'மஹாத்மா காந்தி சரித்திரக் கும்மி'
"பாரத தேசிய கீர்த்தனைகள்"

அபிப்பிராயம்.

நான் சென்ற ஏப்ரல்மாதத்தில் சுதேசமித்திரன் பத்திரிகையில் தேசியகானத்தைப்பற்றி எழுதினதற்கு அனுகூலமாய் கோடகனல்லூர் ஸ்ரீமதி எஸ். ரெங்கம்மாளால் இயற்றப்பட்ட காந்திசரித்திரக் கும்மியையும், பாரததேசிய கீர்த்தனைகளையும் பெற்றேன். மஹாத்மா காந்தியின் சரித்திரம் முழுவதும் சுருக்கமாய் சுலபமான நடையில் அழகான வர்ணமெட்டுகளுடன் அமைக்கப் பட்டிருக்கிறது. பாரததேசிய கீர்த்தனைப் புத்தகத்தின் முதலாவது பாகம் பாரததேவி, இந்தியத்தாய், கதர், காந்தியடிகள், லோகமான்யர், லாலாஜீ, தாஸ், பண்டிதநேரு, ராஜகோபாலாச்சாரியார்,

ரெங்கஸ்வாமி அய்யங்கார், அலிஸகோதரர்கள், ஸரோஜினி தேவி, எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார், வரதராஜுலு நாயுடு, கஸ்தூரிரங்கய்யங்கார், ரபீந்திர நாத், ஸுப்ரமண்ய பாரதி, போஸ், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், மதுவிலக்கு முதலிய விஷயங்களைப் பற்றினது. இரண்டாவது பாகமான பகவன் நாமஸங்கீர்த்தனத்தில் பெரும்பாலும் வைஷ்ணவதிருப்பதிகளில் விளங்கும் மூர்த்திகளையும். நம்மாழ்வார், பாஷ்யகாரர், வேதாந்ததேசிகர், அஹோபிலஸ்வாமி முதலிய மதகுருக்களையும் முடிவில் பார்வதியையும் பற்றிக் கீர்த்தனைகளும் ஒருராகமாலிகையும் காணப்படுகின்றன. இந்தக் கீர்த்தனங்கள் ஸ்ரீதியாக ராஜஸ்வாமிகள் தீக்ஷிதரவர்கள், பட்டணம் ஸுப்ரமணியய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களையும் ஜாவளிகளையும், பண்களையும், ஹிந்துஸ்தானி பார்ஸிகளையும் நானிதுவரையில் கேட்டிராத பலசில்லரைப் பாட்டுக்களையும் அனுஸரித்து, மெட்டுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைநமது தென்னாட்டிலுள்ள ஆண் பெண் யாவரும் ஆனந்தமாய்ப் பாடக்கூடியவை.

ஆனால் சிலவிஷயங்களையும் சேர்த்தால் நலமென்று தோன்றுகிறது ரம்யமான கடிதத்தில் தெளிவான பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருப்பது பரம உபகாரமே இந்ததேச பக்தை ஈசுவரன்தனக்கருளின கவனசக்தியை தேசீய இயக்கத்திலேயே உபயோகித்து அசோகர், சந்திரகுப்தர், ஆக்பர், சிவாஜி, ஜயதேவர், ராமதாஸ், தியாகராஜஸ்வாமி, தாயுமானவர், நால்வர், நந்தனார், கோகலே, நவரோஜி, தீப்பன் கிருஷ்ணதேவராயர், சோழசேர பாண்டியர்கள் இவர்களைப்பற்றிப் பல கீர்த்தனங்களையும் அழகான வர்ண மெட்டுகளில் இயற்றும்படி எல்லாமளிக்கும் கடவுள் ஊக்கத்தையும் சக்தியையும் தீர்க்காயுசையும் அருள்வாராக.

(Sd.) C. R. SRINIVASA IYENGAR, B. A.,
Ramayana Vilas, MYLAPORE.

ஆவணக் காப்பக

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	4	யிந்தியர்	இந்தியர்
6	16	சிநதை	சிந்தை
12	9	விராதி	வீராதி
13	15	சய	சர்
22	6	மக்கள்க்கூக்கம்	மக்களுக்கூக்கம்
34	2	பாரபுகழ்	பார்புகழ்
34	9	றிருமாந்தீசனை	றிறுமாந்தீசனை
35	5	கோதா	கோதாய்
36	18	சிரிய	சிறிய
38	7	யுன்னிட	யுன்னுடை
40	16	முதலையை	தவளையை
49	2	பார்க்கடல்	பாற்கடல்
51	11	யெந்தநெதிரில்	யெந்தனெதிரில்
58	16	பாரெங்சிலும்	பாரெங்கிலும்

மதிப்புரை.

மந்தரந்திரியக் கடையினும் ஒரேகால் அமுதீனுந் திருப்பாற்கடல் போலல்லாது தமிழெனும் போதே நாதோறுந்தித்திக்கும் மொழியாலே தெய்வத்தின்பால் தேயத்தின்பால் தன்னலங் கருதாதுழைக்கும் சான்றோர்பாற் பக்தி புகட்டு மிந்நூல் பன்னப்பன்ன இன்பம் பயப்பதுடனமையாது கருத்தூன்றி நினைக்க நினைக்க நற்பயன் பெரிதும் விளைப்பதாயமைந்துள்ளது. இக்கீர்த்தனங்களைப் பண் கொண்டு பாடக்கேட்டுப் பின் மிதவாதிகளாயும் கதருடைதரியாதும் காவிரிப்புளினத்துக் கண்வளரும் எம்மரங்கனைத் தரிசியாதும் சொல்லளவு வல்லுரை பலபகர்ந்து சும்மா இருக்க இசைவோர் பெரும்பான்மை யிலராவாரென்பது திண்ணம்.

அடிமுடி தேடி அகப்படாவகையில் முக்கணீசனையே யொக்கும் இச்காலத்தமிழ் நாவல்களைப் பொருளையும் பொழுதையுமிழந்து படித்துப் பயனிலாமாந்தராவோர் உடல் சிறியதேனுமித்தகைய அரிய நூற்களைப் பாராட்டி இவ்வாசிரியைக்கு மேன்மேலு மூக்கம் நிறைவதற்குக் காரணமாயிருக்கக் கம்பருக்குப் பந்தம் பிந்தாமல் பிடித்த காளியே அருள்புரிவாளாக.

புரசை பாக்கம்
சென்னை.
31-5-24

T. N. சேஷாசலம் அய்யர்,
பி.ஏ., பி.எல்.,
ஹைகோர்ட் வக்கீல்.